வார இதழ்.

மு. கருணாநிதி.

முரசு 2 | சென்னை | 25—11—55 | வெள்ளி | ஒலி 35

முன்கதை ...

நாராயணி– பருவக்கொடியாக செழித்து நின்றபோது பெற்றோர்—உடன் பிறந்த மற்றோர் அனைவரையும் இழந்த அனாதை. ஆண்டவன் சன்னிதானத்திலே அழுது புலம்புவதே அந்த அபலை பெற்ற ஆறுதல். அப்போதுதான் இடையில் குறுக்கிடுகிறார் கோயில்அர்ச்சகர் கிருஷ்ணய்யர். சாகசத்தால் அவளைத் தன் உடமையாக்கிக் கொள்கிறார்.

ஒருநாள் அய்யர், தான் நாராயணியுடன் நட்பு கொண்ட காரணத்தால், தன் கோயில் வேலை பிடுங்கப்பட்டுவிட்டதாகக் கூறுகிறார். அவரது தியாக மனப்பான்மைகண்டு வியந்த நாராயணி, அவருக்காக தன் உடல், பொருள், ஆவி—மூன்றையும் தத்தம் செய்யத் தயார்—என்கிறாள்.

இந்த வார்த்தைகளே அய்யருக்கு சாதகமாகின்றன. மற்றொரு நாள், அவர் ஓடிவந்து, தான் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கி விட்டதாகவும், அது விலக நாராயணி கோயில் தருமகர்த்தா நரசிம்ம நாயுடுவிடம் தன் உடலை தியாகம் செய்ய வேண்டுமென்றும் துடிக்கிறார். நாராயணி மயக்க முறுகிறாள். ...

நாராயணிக்கு பிரக்ஞை வந்தபோதுதான் கட்டிலிலே படுக்க வைக்கப் பட்டிருப்பதை உணர்ந்தாள். தன்னுடைய நெற்றியை மெதுவாகத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்த கைகளைத் தனது கைகளால் வெறுப்போடு நகர்த்தினாள். அப்படி அவள் நகர்த்தும்போது, கண்களையும் அகல விரித்துப் பார்த்தாள். அவளருகே சாய்ந்தபடி அமர்ந்திருந்தது, கிருஷ்ணய்யர் அல்ல!

கிருஷ்ணய்யரைவிட அழகான ஒரு மனிதர். நல்ல தேகக்கட்டு படைத்த வாலிபர். முறுக்கிவிடப்பட்ட இளமீசைகள் அவரது முகத்தின் கம்பீரத்தை அதிகப்படுத்திக் காட்டிக் கொண்டிருந்தன. பரந்த மார்பகமும், அதை மூடியிருக்கும் பட்டுச் சொக்காயும், பார்ப்பவரைக் கவரத் தக்க விதத்திலே அமைந்திருந்தன. நெற்றியிலே லேசான நாமம்—சிகப்புக் கோடு மட்டும்! அவர், நாராயணியை உற்றுப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். அவரைக் கண்ட நாராயணிக்கு பேச வாயெழவில்லை. எழுந்தோடுவதற்கும் சக்தியற்றுப் போனாள். ஏதோ சொல்ல நினைத்தாள்; வாய் குழறிற்று.

"நீங்கள்...? நீங்கள்......?"—என்று மட்டுமே அவளால் கேட்க முடிந்தது. அப்படிக் கேட்டுக் கொண்டேயிருந்தாள்.

"நான்தான் தர்மகர்த்தா நரசிம்ம நாயுடு" என்று கூறியவாறு, நாயுடு அவளை இறுகத் தழுவிக் கொண்டார்.

நாராயணி, அவரிடமிருந்து விலகிக் கொண்டு, "அய்யோ, தெய்வமே! இது உனக்கு அடுக்குமா?" என்று கதறினாள். தெய்வம் அப்போது என்ன வேலையாக எங்கே போயிருந்ததோ; தன் பிரதிநிதியாக 'காமனை' அனுப்பியிருந்தது போலும்! அவனும் நரசிம்ம நாயுடு பக்கம் சேர்ந்து கொண்டு தூபம்போட ஆரம்பித்தான்.

"கண்ணே நாராயணி! என் பேச்சைக் கேளடி: பெண் தெய்வமே!" என்று நாயுடு அவள் அழகின்முன்னே மண்டியிட்டார்.

"என் கணவர்தான் இதுபோன்ற இழி தொழிலுக்கு இசைந்தார் என்றால், கோயில் தர்மகர்த்தாவாகிய தாங்களும் பாவச் செயல் புரியலாமா?" எனக் கண்ணீர் வடித்தபடி தர்மகர்த்தாவின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு துடித்தாள் நாராயணி.

"பாபம், புண்யம் எல்லாம் எனக்குத் தெரியாது நாராயணி—அதைப்பற்றியெல்லாம் உன்னிடம் உபதேசம் கேட்கத் தேவையில்லை. வாரம் ஒருமுறை எது தவறினாலும், கோயிலிலே வாரியாரின் உபதேசம் தவறுவதில்லை. அதை வரி பிசகாமல் என் காதால் கேட்டுக் கொண்டுதான் வருகிறேன்". என சிரித்தபடி அவளை வாரியணைத்தார் நாயுடு!

அவரது வாலிபம் துள்ளும் வலிமை மிக்க கரங்களிலே நாராயணியின் மெல்லிய இடை சிக்குண்டு நெளிந்தது; வளைந்தது; துவண்டது!

அந்தப் பலமான அணைப்பிலே சிக்கியபடியே நாராயணி, அவரைப்பார்த்துப் பேசினாள். இருவருடைய முகங்களும் ஒன்றுக்கொன்று வெகு அருகாமையிலே தானிருந்தன. அவள் ஆத்திரத்தோடு கேட்டாள்: "நீங்கள் செவி மடுக்கும் உபன்யாசங்களிலே இப்படித்தான் இன்னொருத்தன் மனைவியிடம் இன்பப் பிச்சை கேட்கச் சொல்லுகிறார்களோ?" என்று!

"ஆமாம் கண்ணே — ஆமாம்! சாம்பல் பூசிய சிவனை, தன் மனைவியோடு சரச சல்லாபத்திற்கு அனுப்பிய இயற்பகை நாயனார் புராண காலட்சேபம் — இன்று காலையிலே தான் ஆயிரக் கால் மண்டபத்திலே அதிவிமரிசையாக நடைபெற்றது" எனக்கூறியபடி அவள் முகத்தோடு தன் முகத்தைப்பொருத்த முனைந்தார். அவரிடமிருந்து எப்படியும் விடுபட வேண்டும் என்ற ஆவேச உணர்ச்சியோடு அவரை ஒரே தள்ளாகக் கீழே தள்ளிவிட்டு சுவரின் பக்கம் போய் ஒதுங்கி நின்று விம்மியழத் தொடங்கினாள் அவள்.

நாயுடுவுக்குக் கோபம்பிறந்தது. "நாராயணி! இதனால் எனக்கொன்றும் நஷ்டமில்லை. நாளைக்கு உன் புருஷன் கையிலே காப்பு போட்டுக்கொண்டு வீதியிலே போவான். அதைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையிருந்தால் உன் இஷ்டப்படியே நட!" என்று கூறிவிட்டு நாயுடு அறையைவிட்டு வெளியேறினார்.

நாராயணி சிலைபோல் நின்று கொண்டிருந்தாள். கிருஷ்ணய்யர் அவளை நோக்கி வேகமாக ஓடி வந்தார்—"அடிபாவி! என்னை மோசம் செய்து விட்டாயே!" என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு அலறினார். நாராயணிக்கு அவரோடு பேச மனமில்லை. பேசாமல் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு கிருஷ்ணய்யரை எரித்து விடுவதுபோல் பார்த்தாள்.

"ஏண்டி, இப்படி என்னைப் பாக்கிறே? என்னை ஜெயிலில்போட

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

வெற்றியின் ரகசியம்!



ஒரு பெட்டி நிரம்ப . . . ஒரு பெட்டி காலியாகிறது!

தங்கக் குழம்பைச் சிந்திவிட்டு முன்னாள் மேற்றிசை மறைந்த கதிரவன்—பின் பலநாள் தோன்றாமலிருந்துவிட்டு திடீரென்று ஒரு நேரம் உதயமாவதைப் போல, மப்பும் மந்தாரமுமாய் இருந்த இன்றைய உலகத்தில் போர் மேகந்தான் நீங்கியிருக்கிறதா?—என்று எண்ணப்படும் சந்தர்ப்பத்தில் பொதுவுடைமை நாட்டின் பரிதியாம் புல்கானின் டெல்லிக்கு வந்திருக்கிறார்.

புரட்சியின்போது இழுத்துப் பூட்டப்பட்ட ரஷ்யாவின் கதவுகளை இன்றுதான் திறந்து கொண்டு புல்கானின் வந்திருக்கிறார்!

'வருக! வருக!'— என்னும் ஆரவாரம் வல்லூறு மனம் கொண்டோரிடமிருந்து கிளம்புகிற இந்த நேரம், என்றுமே வெண்புறாமீது மையல் கொண்டிருக்கும் நம்மிடமிருந்தும் அந்த கோஷம் புறப்படுவதில் ஒரு வேகமும், தனி அன்பும் இருக்கத்தான் செய்கிறது.

'புல்கானினே வருக! புது உலகத் தூதுவனே வருக!'—என்று நாம் வரவேற்புரை வழங்கும்போது. குடிசையில் இருப்போரையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் ஜெகத்திலிருந்து வரும் அந்தத் தூதுவனை வடநாட்டு அடிமை நிலையிலே இருந்தபடியே வரவேற்க வேண்டியிருக்கிறதே—என்ற துயரம் நம்மைத் துரத்திப் பிடிக்காமல் இருக்கவில்லை.

இருபத்தி எட்டாம் தேதி அவர் சென்னை வரும்போது காமராசர் அவருக்கு மாலையிடுவார்.

பரிசும் கொடுக்கப் போகிறாராம், சென்னை மாநிலத்தின் கலாச்சாரத்தை விளக்கும் வகையில்!

தில்லையிலே ஆடும் நடராசர் சிலையைக் கொடுக்கலாமா—என்றுகூட யோசிக்கிறார்களாம்!

நடராசர் சிலை—பொன் கூரையின் அடியிலே கூத்தாடும் உருவம்!

அந்த ஆட்டத்திலே வேதத்தைப் பிழிந்தெடுத்த கருத்தும், உபநிஷத்தின் உட்பொருளும் இருப்பதாகச் சொல்கிறார்கள்!

அந்தச் சிலையின் காலுக்கடியிலே ஒரு குழந்தை இருப்பானேன்? அன்புத் தேன் குலுங்கும் புது மலரின் பாதத்தில் பாதகச் செயல் சித்தரிக்கப் படுவானேன்?—இப்படிக் கேள்வி கேட்டு பதிலும் சொல்லி காலத்தைக் கழிக்கிறார்கள், வேதாந்தப் பிரியர்கள்!

"அந்தக் குழந்தைக்குத்தான் பாபம் என்று பெயர். அழும் போதும் அந்தக் குழந்தை சிரித்துக் கொண்டிருப்பதைக் கவனித்திருக்கிறாயா? எனவே அதிலே தோஷமில்லை"-என்று

(7) ஆடும் சிதம்பரம்!

விளக்கம் தந்திருக்கிறார். ஆச்சாரியார்!

அத்தகைய பொருள் பொதிந்த வெண்கலச் சிலையை ரஷ்யப் பிரதமருக்கு அளிப்பதிலே பெருமை இருப்பதாகப் புளகாங்கிதம் கொள்கிறார்கள்! 'வேறு எந்தப் பரிசும் வேண்டாம். இதுவே பொருத்தமாயிருக்கிறது'—என்றும் பேசிக் கொள்கிறார்கள்!

ஆமாம்; உண்மையிலேயே சென்னையின் சார்பிலே காமராசர் அந்தச் சிலையை புல்கானினுக்கு அளிப்பதிலே உண்மை இருக்கத்தான் செய்கிறது.

நடராசர் வடிவிலே பஞ்சசீல கீதத்துக்குப் பக்குவமாக அபிநயம் பிடித்துப் பழக்கப்பட்ட வடநாட்டு ஏகாதிபத்யத்தின் காவலர் நேரு! அவர் கையிலே புகழ்பெற்ற 'பாட்னா சம்பவத்தைக் குறிக்கும் துப்பாக்கி! இன்னொரு கையிலே அவர் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் கை விலங்கு! அவர் காலடியிலே காமராசர்- அவர் ஆண்டு கொண்டிருக்கும் சென்னை!

—இந்தக் கருத்தும் அந்தச் சிலைக்குப் பொருத்தமாகத் தான் இருக்கிறது.

அணையும், ஆலையும் அங்கே—வடநாட்டில்!

அணை உடைத்த துயர வெள்ளம் இங்கே—தென்னாட்டில்!

எல்லை காணா அளவில் திட்டங்கள் அங்கே! —'ஒன்றுமில்லையே' என்ற ஏக்கம்தான், இங்கே!

ஹீராகுட்; பக்ராநங்கல் இல்லை -ஈ. கொசு போன்ற அளவில் சிறுசிறு கண் துடைப்புகள்தான் உண்டு!

வளமும், வழிவகைகளும் இருக்கும்போது கண்ணீர்க் குளத்தை உரிமையாக்கிக் கொண்டு வாழ்கிறது தென்னாடு!

அந்த ஆடும் சிதம்பரத்தின் காலடியில் அசுரவடிவக் குழந்தையும் சிரித்தபடிதான் இருக்கிறது.

நானூறு கோடி கேட்டு: இருநூறு கோடி பெற்ற காமராசரும் சிரித்துக் கொண்டுதான் இருக்கிறார்.

ஏன்?

ஏகாதிபத்ய அடிமை மனப்பான்மை அவர் முகத்திலே மகிழ்ச்சி ரேகைகளை ஏற்படுத்தியிருக்கிறது. அவருடைய வடநாட்டு மோகம் உதைக்கும் நேருவின் பாதங்களை முத்த மழையால் குளிப்பாட்டுகிறது!

நெஞ்சிலே வீரக் கனல் எழுப்பும் வரலாறு இருந்தும், ஆடிக் காற்றிலே பஞ்சாய் எதிர்க் கூட்டத்தை ஆக்கிடும் பண்பு இருந்தும், பாதத்திலே கிடக்கிறார் காமராசர்!

வெட்டிய இடத்திலெல்லாம் தங்கமும், தன்னிகரில்லா கனிப் பொருள்களும் கிடைக்கின்றன!

கடலிலே குளித்தால் செல்வமடை திறக்கும் முத்தும், பவழமும் மலைமலையாய் குவிந்திருக்கின்றன!

புலி வாழும் காட்டிலும் புதுமணம் பரப்பும் சந்தனம் தலை நிமிர்ந்து நிற்கிறது!

—அவைகளையெல்லாம் அன்னியன் சுரண்ட அனுமதித்துவிட்டு, கண்ணியம் மறந்த வகையிலே 'காலடி தொழும் படலம்' நடத்துகிறார் காமராசர்!

தில்லை நடராசர், பொன் வேய்ந்த கூறையிலே பாலகன் முதுகைப் புண்ணாக்கும் பணியைப் புரிந்து வருகிறார். இங்கு பண்டிதர் ஆடும் ஏகாதிபத்ய நடனத்துக்கும் அப்படித்தான் ஒரு கூறை—பஞ்சசீலமென்ற பத்தரை மாற்றுத் தங்கக்கூறை வேயப் பட்டிருக்கிறது. அதன் கீழேதான் வேதனைப்படும் திராவிட சமுதாயம் தொண்டை விக்கிக் கதறி கொண்டிருக்கிறது!

தங்கக் கூறை 'தக தக' வென மின்னிக் கொண்டிருக்கும் அழகை மட்டும் ரசித்துவிட்டு, விடுதலைப் பசியால் வீறிட்டு அழுதுகொண்டிருக்கும் திராவிட இனத்தின் குறைகளைக் கருத்தில் கொள்ளாமல் புல்கானின் திரும்பிவிடக் கூடாது.

காமராசர் தரப்போகும் நடராசர் சிலை இந்தத் தத்துவத்தை விளக்குவதாக இருக்கட்டும்! அடுத்த முறை புல்கானின் இங்கு வரும்போது, முதுகெலும்பு பெற்று, அடிமை முகில் கிழித்த முழு மதியாய்த் துலங்கும் காமராசரைக் காணட்டும்!

—மாறன் எம். ஏ.

ம் கூடாததுதான்!
ற்கான சூழ்நிலை

தாவிவருகிறது—
! பச்சைக் குழந்
கோதரர்கள் மூழ
டு இருப்பார்கள்?
துச் செல்கிறது.
தான் மாணவர்
பதும், அதனால்
பழிச் சொல்லே

டிமை பூமியிலே
டர்பு அவசியமா
பரம்பரையைப்
து வரும்போது
வரும் கண்டிருக்

வதற்கு அந்நாட்டு
ர. 1919-ம் ஆண்
ம முரசுகொட்டி,
ந்த எரிமலையை
வர்கள் துவக்கி
இயக்கமாக மாறி

ம்பூட்டியவர்கள்
ாடுத்துத் தெம்பி
ணியில் ஈடுபட்
குப் பழுது ஏற்
பணி புரிந்திருக்கி

டுச் சுவடிகளைத்
ரியப் பேய்களை
ர் தயங்கவில்லை.

ம்முடைய மாண
த்தில் படிப்பை

னித சமுதாயம்
வங்களால் உன்
னிஸ்டாக' ஆக
னிஸ்ட்களுக்குப்
ண்மைப் போது
யதோன்றும்.

த்தறிவின் கரை
வன செய்ய
கத்தைச் சேர்ந்த

ர் மேற்கொண்டு
ருந்திய பன்னி
நிறுவப்பட்டிருக்
ராவிட மாணவர்
ட முன்னணிப்

க் கழகம்!

தலையங்கம்

"மாணவர்களை அரசியலில் ஐக்யப்படுத்தலாமா?"—என்று ஒருபுறமிருந்து குத்தீட்டி எனக் கருதி நம் மீது வீசப்படும் கோணல் ஆயுதம் பாய்ந்துவருகிறது. "பார்ப்பனரல்லாத மாணவர்கள் திராவிடர் இயக்கத்திஞல்தான் கெட்டழிந்து போகிருர்கள்!"—என்று இன்ஞெருபுறம் ஒருகுரல் கேட்கிறது; பொய்க் கதைகள் புனைந்து கூவிப் பிதற்றுவதையே வழக்கமாக்கிக் கொண்ட நீதி அமைச்சரது வாய் வீச்சுகூட இதிலே கலந்திருக்கிறது!

காதலைக் கவிதையல்ல களம் போதும் பேச்சு; கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 25—11—55 வெள்ளி

மாணவர் கழகம்!

"நண்பர் மதியழகன் எனக்கு மிகவும் தேவைப் படுகிருர். அவரை, இன்னமும் மாணவர் கழகத்தில் அனுமதிக்க நான் தயாராயில்லை. இதனைவிட விரிந்த பரந்த—ஆனல் எந்த விதத்திலும்—குறைந்திராத துறையில் பணியாற்ற அவரை உங்களிடமிருந்து எடுத்துச் செல்கிறேன்"

—என்று அன்பக் கரம் நீட்டி, சென்ற கிழமை சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாட்டில், அண்ணு அவர்கள் மாணவர் தலைவர் மதியழகன் அவர்களை தாய்க் கழகத்தின் ஏகபோக உடைமையாக்கிக் கொண்டார்கள்.

தோழர் மதியழகன் சென்ற பத்தாண்டு காலமாக மாணவர் பட்டாளத்தைப் பகைவரும் மெச்சுமளவுக்கு நடத்திச் சென்றிருக்கிருர். சில ஆண்டுகள் 'அறிவகத்'தின் பொறுப்பாளராகவும், தி. மு. க. வின் துணைச் செயலாளராகவும், சில மாதங்கள் ஆச்சாரியாரின் அடக்குமுறைப் பண்பிஞல் காராக்கிரகவாசியாகவும் அவர் இருந்தபோதிலும்கூட மாணவர் கழகத்தை அவர் மறந்தது கிடையாது!

மாணவப் பருவத்திலேயே அவர் ஆட்சியாளரின் ஆணவப் போக்கிற்கு ஆளாகியிருக்கிருர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே குவிந்திருக்கும் கந்தகக் கிடங்கு, மதியழகன் என்னும் பொறிபட்டால் பற்றிக் கொள்ளுமோ—என்று பயந்து ஐந்து மைல் சுற்றளவுக்குள் அவர் பிரவேசிக்கக்கூடாது—எனத் தடைவிதித்து மகிழ்ந்தனர் சிறு தலைப் போக்கினர். தந்திக் கம்பிகள் அறுப்பதிலும், தண்டவாளம் பெயர்ப்பதிலும் பயிற்சி பெற்ற தேசிய மாணவ ஓநாய்கள் அவர் தலையை உடைத்து, அதில் வழிந்த இரத்தத்தைக் குடித்து மகிழ்ந்திருக்கின்றன. அறிவு நூல்கள் பயிலவேண்டிய வயதிலே அவரைக் குற்றவாளிக் கூண்டிலே ஏற்றி வேடிக்கை பார்த்து நின்றது அவிநாசியார் ஆட்சி!

—இவைகளையெல்லாம் எதிர்த்து நின்று, எதிர் நீச்சல் போட்டு, வைரம் பாய்ந்த உள்ளமும், ஈரமில்லாதோரை எதிர்த்து நிற்கும் திறனும் கொண்ட தோழரை தாய்க் கழகத்துக்கு அனுப்பி வைப்பதிலே மாணவ நண்பர்கள் மனம் மயங்கிஞலும்கூட எங்கிருந்தாலும் அவர் பணி தங்களுக்கு உண்டு — என்ற நினைவிலே அவர்கள் மகிழ்ச்சி பெறுவதைக் காணுகிறேம்.

மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகள் மட்டுமல்ல; புத்துலகின் சிற்பிகள்; பகுத்தறிவின் பாதுகாவலர்கள்; பழமையை நோக்கிப் பாயும் இடிக் குழாம்கள்! —இந்தக் கொள்கைதான் திராவிட மாணவர் இயக்கத்தை தென்னகத்தின் தன்னிகரற்ற முற்போக்கு சக்தியாகவும், தேக்கி வைக்கப்பட்டிருக்கும் விடுதலை வெள்ளமாகவும் ஆக்கியிருக்கிறது.

சமயம் நேரும்போது சண்டமாருதமாகவும், மற்ற நேரங்களில் அறிவுத் தேன் தேடும் தும்பிகளாகவும் நம் மாணவர்கள் இருக்கிருர்கள்!—என்று நாம் அகமகிழும்போதுதான் நம் செயல் கண்டு சிறுமியரும் சிறுமதியாளரும் இருக்கிருர்கள்.

மாணவர்கள் அரசியலில் நேரடியாகக் கலக்க
ஆனல் இந்த விவேகமற்றோர் துரைத்தனம் அத
களையா அமைத்துக் கொடுத்திருக்கிறது?

தாயின் கழுத்தை நெறிக்க இந்திப் பேண்
என்ருல் இளம் இரத்தம் கொதிக்காமல் இருக்குமா
தைகளின் படிப்பிலே மண்விழுகிறது என்ருல், ச
மூடர்களாய் வாழ்வதை யார்தான் பார்த்துக் கொண்
—இளம் நெஞ்சங்களை அரசியல் களத்துக்கு ஈர்த்
ஞானமற்ற செயல்புரியும் ஆட்சிபீடம்! எனவே நாம்
களை அரசியலில் பங்கு பெறச் செய்கிறேம்—என்
திராவிட மாணவர் வாழ்வு பாழாகிறது என்பதும்
யன்றி வேறல்ல!

சுப்ரமணியஞருக்கு, நன்ருகத் தெரியும் -- அ
மாணவர்களுக்கும் அரசியலுக்கும் எத்தகைய தொ
கிறது என்பது அவருக்குப் புரியாத ரகசியமல்ல!
பாதிக்கும் பாதகச் செயல்கள் அரசு கட்டிலிலிருந்
வாலிப நெஞ்சங்கள் போர்ப் பறை முழங்குவதை அ
கிருர்; அவரது கட்சியும் கண்டிருக்கிறது.

அடிமைச் சீனம் இன்று ஆனந்தப் பள்ளு பாடு
மாணவர்களும் முக்கிய காரணமாயிருந்திருக்கிருர்கள்
டிலே நடைபெற்ற 'மே-4 இயக்க'த்தின்போது உரிமை
சீனத்திலே முதன் முதலாக புகைந்து கொண்டிரு
நெருப்பு கக்கச் செய்தவர்கள் மாணவர்கள்தான்! அ
வைந்த அந்த இயக்கம்தான் பின்னர் மக்கள்
ஆட்சி பீடத்தையே உலுக்கியிருக்கிறது'

குடியானவர்களுக்கும், தொழிலாளிகட்கும் நே
மாணவர்கள்! போர்க் களத்திலே மகனைப் பலிகொ
அழுத தாய்மார்களை வீடு வீடாகச் சென்று தேற்றும்
போகும் மாணவர்கள்தான்.—மாணவ வாழ்க்கை
படாமலேயே இப்படியெல்லாம் அவர்கள் நாட்டுப்
ருர்கள்!

'டிசம்பர்-9 இயக்கம்' கூவியழைத்தபோது, ஏ
தூக்கி எறிந்துவிட்டு நாட்டிலே ஊடுருவும் ஜப்பா
ஓட்டுவதற்கு துப்பாக்கியைத் தூக்குவதற்கும் அவர்க

—அத்தகைய வீரமும், தீரமும் பெற்றவர்கள் ந
வச் செல்வங்கள்! போரும் டாக்டர்கள்; அந்த நே
யும் மறந்துவிட மாட்டார்கள்!

ஒரு சமயம் லெனின் சொல்லியிருக்கிருர், "ம
இதுவரை உற்பத்தி செய்திருக்கும் அறிவுச் செல்
மூளையை நிரப்பிக் கொண்டால்தான் நீ ஒரு 'கம்யூ
முடியும்" — என்று! இது இந்த நாட்டுக் கம்யூ
பொருந்தி வராவிட்டாலும், இந்தக் கொள்கை உ
வுடைமை வாதிகளாகிய நாம் கடைப்பிடிக்க வேண்டி

அந்த நிலையிலே நம்முடைய மாணவர்கள் பகு
கண்ட மேதைகளாக விளங்க வேண்டும். அதற்கா
வேண்டிய பணி திராவிட மாணவ முன்னேற்றக் கழ
தாகும்.

தோழர் மதியழகன் விட்டுச் சென்ற பணிகளை
நடத்திச் செல்ல செல்வாக்குக் கொண்ட சக்தி பெ
ரெண்டு பேர் கொண்ட அமைப்புக் குழுவொன்றும்
கிறது. அந்தக் குழுவினர் திறம்பட பணியாற்றி தி
முன்னேற்றக் கழகத்தை வலிவும் பொலிவும் கொண்
படையாக மாற்றுமென்று நம்புகிறேம்.

வாழ்க திராவிட மாணவர் முன்னேற்ற

றத்துக்கு நீயும் தீர்மானிச்சுட்டி யா?"

கிருஷ்ணய்யர் பரிதாபமாகக் கேட்டார். நாராயணி பேசாமலி ருக்கவே, மீண்டும் அவரே பேச்சைத் தொடர்ந்தார்.

"அடி என் கண்ணு! என் நிலைமை நோக்குத் தெரியாதுடி! கைக்கு விலங்கு காத்துண்டு இருக்குடி!...கோயில்ல அம்மன் தாலியையும்—மூலவிக்ரகத்து தங்கக் கவசத்தையும் நான் திருடி விட்டேன்னு பேரு கட்டிவிட்டா னுங்கடி! வித்த இடத்திலே, அந்த வாங்கின பயலுகளும் என்னைக் காட்டிக் கொடுத்து விட்டானுங் கடி! இப்ப என்னடி பண்றது! தர்மகர்த்தா தயவு இல்லேன்னு தலை தப்பாதுடி; தலை தப்பாது"

நாராயணி அழுது கொண்டிருந் தாளே தவிர பேசவில்லை. அவளது நெஞ்சிலே எத்தனையோ குமுறல்கள்! கொழுந்து விட்டெரியும் தீ ஜுவாலையைப்போல இருந்தன அவள் கண்கள்.

"எனக்காக இந்த தியாகம் பண்ணுடி! இது ஒண்ணும் பெரிய குற்றமில்லேடி. தர்மகர்த்தா நரசிம்மலு நாயுடு நல்ல மனுஷன்—எனக்கு சகோதரன் மாதிரி! அவன் மனசு வைச்சாதான் என்னைக் காப்பாத்த முடியும். ஒரு குல ஸ்த்ரீ, அஞ்சு பேர் வரை ஆடவாளிடம் தொடர்பு வச்சிக்கலாம்னு நம்ப பாரதமே சொல்லுதடி! கேளுடி என் பிராணநாயகி-பத்து வருஷம், பதினைந்து வருஷம்னு என்னை ஜெயில்ல போட்டுட்டா—அப்ப கவலைப்பட்டுகிட்டு தானே இருப்ப—அந்தக் கவலையில்லாம ரெண்டு பேரும் சந்தோஷமாயிருக்க, சம்மதம் கொடடி!"

அய்யர் கெஞ்சினார். நாராயணியின் மௌனம் நீடித்தது. அய்யருக்கு சிறிது நம்பிக்கை பிறந்தது. நாராயணி தனக்காகத் தன்னை தியாகம் செய்யத் தீர்மானித்து விட்டதாகக் கருதினார்.

"அவர் எங்கும் போய்விடவில்லை. அடுத்த அறையிலேதான் இருக்கிறார் — இப்போதே வரச் சொல்றேண்டி — மறுபடியும் அவரை விரட்டிடாதே!" என்று கூறியபடி கிருஷ்ணய்யர் வெளியே ஓடினார்.

நாராயணி, கண்ணிரைத் துடைத்துக் கொண்டாள். ஏதோ ஒரு முடிவோடு எழுந்து நின்று நாயுடுவின் வரவை எதிர் நோக்கினாள். நாயுடுவும் ஆவலோடு உள்ளே நுழைந்தார். நாராயணி அவர் முகத்தை ஏக்கத்தோடு பார்த்தாள்.

"வந்துவிட்டேன் நாராயணி! நான் எங்கும் போகவில்லை. பக்கத்து அறையிலேதான் இருந்தேன். நீ என் உறுதியை சோதிப்பதற்காகவே பிடிவாதம் செய்தாய் என்பதைப் புரிந்து கொண்டேன்" என்று பல்லை இளித்தபடி அவளது பக்கம் வந்து நின்றார் நாயுடு. அவர் பேசி முடிப்பதற்குள்ளாக நாராயணி அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு, "என்னை எப்போதும் வைத்துக் காப்பாற்றுவீர்களா?" என்று திடீரெனக் கேட்டுவிட்டு தேம்பி அழுதாள்.

நாராயணியைப் பற்றிய பழைய நினைவுகள் அய்யரைக் குடைந்தன. நாராயணியை நாயுடுவிடம் அர்ப்பணிக்காமல், ஜெயிலுக்கே போயிருந்தாலும் பரவாயில்லையே; ஜெயில் என்ன இந்தக் கோயில் மண்டபத்தை விடவா மோசமாக இருக்கப் போகிறது-என்று தனக்குத்தானே வருந்திக் கொண்டிருந்த அய்யருக்கு, எப்படியும் நாராயணியை ஒருமுறை சந்தித்து விட வேண்டுமென்ற ஆசை பிறந்தது. அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள தக்க சமயம் கிடைத்ததாக எண்ணிப் புறப்பட்டார்.

நாராயணி வீட்டுக் கதவைத் தட்டினார். நாயுடுதான் வந்துவிட்டார் போலும் என்ற நினைவில்

நடுத்தெரு நாராயணி

தொடர்ச்சி...

இதுபோன்ற வார்த்தை அவளிடமிருந்து வெளியாகும் என எதிர் பார்க்காத நாயுடுவும் திடுக்கிட்டார்.

"உண்மையாகவே கேட்கிறேன்—என்னை உங்களிடம் ஒப்படைத்தவனை இன்று முதல் புருஷன் என்கிற நிலையிலே வைத்து நான் பூஜிக்கப் போவதில்லை. இனி நீங்கள்தான் எனக்குக் கதி! நீங்கள்தான் எனக்குப் பதி! நான் உங்களுக்கு மனைவியாக இருக்கும் பாக்கியம் பெற்றவள் அல்லதான்! ஆனாலும், உங்கள் அடிமையாக இருக்கிறேன். மீண்டும் என்னை அந்தப் பாவியின் கையிலே ஒப்புவிக்காமல் இருப்பதாக எனக்கு வாக்குக் கொடுங்கள்'''

நாராயணியின் கோரிக்கை எதுவாக இருந்தாலும் நிறைவேற்றுவேன் என்று சொல்லித் தீரவேண்டிய நேரம் அது! அதனால் நாயுடு தலையசைத்தார்.

"துண்டுக் கரும்பு கேட்டவனிடம்—தோட்டத்தையே எடுத்துக் கொள் என்பதுபோல் இருக்கிறது நாராயணி உன் பேச்சு!" என்றார். பிறகு வென்றார். கிருஷ்ணய்யர் மறுபடியும் கோயில் குருக்களானார். திருட்டுப் போன நகைகளைப் பற்றி சரியான புலன் கிடைக்கவில்லை யென்று போலீசாரும் அறிவித்து விட்டனர். காலை முதல் அர்த்தஜாமப் பூஜை வரையிலே கிருஷ்ணய்யருக்கு கோயிலிலே வேலைதான்! இரவு இரண்டு மணி வரையில் தினந்தோறும் பக்தர்களுக்குப் பிரசங்கம் செய்வார். அதற்குமேல் கோயில் மண்டபத்திலேயே படுக்கை, உறக்கம் எல்லாம்! நாயுடுவுக்கும் நாராயணிக்கும் ஒரு குழந்தை பிறந்து, பிறந்த நாலாம்நாள் நல்ல வேளையாக அது இறந்துவிட்டது. அது உயிரோடு இருந்திருந்தால் ஒருவேளை நாயுடுவின் தொடர்பு அறுந்திருக்கலாம். நாராயணி, கிருஷ்ணய்யர் என்று தனக்கு ஒரு நாயகன் இருந்ததையே மறந்துவிட்டாள்.

தர்மகர்த்தா ஒருநாள் ஊரில் இல்லை என்ற செய்தி கிருஷ்ணய்யர் காதுக்கு எட்டியது. நகரசபைத் தலைவர் தேர்தலுக்காக ஏழெட்டு உறுப்பினர்களை விலைக்கு வாங்கி எங்கேயோ ஒரு காடாரம் பத்திற்கு ஓட்டிக்கொண்டு போய் விட்டார் என்றும், திரும்ப இரண்டு நாட்கள் ஆகும் என்றும் அய்யர் கேள்விப் பட்டார்.

அவளும் கதவைத் திறந்தாள். அய்யர் எதிரே நின்றார். நாராயணி அவரை உடனே வெளியேறுமாறு கட்டளையிட்டுத் தன் அறைப் பக்கம் போனாள். அய்யரும் அவளைத் தொடர்ந்தார். "மரியாதையாகப்போய்விடுவது நல்லது!" என எச்சரித்தாள் அவள். அய்யர் கெஞ்சினார்.

"அன்றொரு நாள் கோயிலிலே முதன் முதல் சந்தித்துக் கொஞ்சினீரே; அந்த நாராயணி அல்ல இவள்! இவள் நாயுடு மனைவி—தர்மகர்த்தா நரசிம்மரின் உடமை!" என கர்ச்சித்தாள் அவள்.

"என்ன இருந்தாலும் நீ என் மனைவியல்லவா?" — அய்யரின் பசிக்கு எப்படியும் அவளை இரையாக்கித் தீரவேண்டும். அவளோ, எரிமலையாக இருந்தாள். அய்யரைச் சுட்டெரித்துவிடும் நெருப்புக் குண்டங்களாகக் காட்சியளித்தன அவள் விழிகள்.

"முடியுமா முடியாதா நாராயணி?"—முரட்டுத்தனமாக அவளது கரங்களை இழுத்த அய்யரின் கன்னத்திலே நாராயணி "பளார்!" என அறைந்தாள்.

"அடி விபச்சாரி! உனக்கு இவ்வளவு கொழுப்பா?" எனக் குதித்தார் அய்யர்.

"நான் விபச்சாரிதான் அய்யரே; விபச்சாரிதான்! உம்மைப்போன்ற மனைவியை விற்கும் அரிச்சந்திரர்களின் மத்தியிலே என்னைப் போன்றவர்கள் எப்படி கற்போடு வாழ முடியும்?"—நாராயணி பெருங் கூச்சலிட்டுப் பேசினாள்.

"பத்து வருட சிறைவாசம்! அதைத் தாங்க உம்மால் முடியவில்லை! பத்தினியின் உடலை விற்றீர்! பகற் கொள்ளைக்காரனைப் போல, பகவானின் சொத்தைத் திருடி, மனைவியைப் பரத்தையாக்கி—மானத்தை இழந்து — உயிரைக் காப்பாற்றிக் கொண்ட உமக்கு, என்னை மனைவி என்று அழைக்கவும் உரிமை வாழ்கிறதோ? தூ! வெட்கங் கெட்ட மனிதரே! போமய்யா போம்! உமது பித்தலாட்டங்களைப் பிரசங்கம் என்று போற்ற பக்தர்கள் இருக்கிறார்கள்; அவர்களிடம் போம்!"

விரல் நீட்டி தெரு வழியைக் காட்டி நின்றாள் நாராயணி.

அய்யரோ அவளை விடுவதாயில்லை. எப்படியும் அன்றைய தாகத்தைத் தணித்துச் செல்லவே விரும்பினார். எதிரே நிற்பது ஏதோ ஒரு மண் பதுமை என்ற எண்ணம்தான் இருந்தது நாராயணிக்கு!

அய்யர், அவளைத் தழுவிக் கொண்டார். "தப்ப முடியாது நீ!" என்று கரகரத்த குரலிலே கத்தினார். நாராயணிக்கும் அவருக்கும் சிறிதுநேரம் கடும் போராட்டமே நடைபெற்றது. எப்படியும் விடுபட முடியாது எனக் கண்ட நாராயணிக்கு திடீரென ஒரு யோசனை—நாயுடு மேசையிலே ஒளித்து வைத்திருக்கும் கைத் துப்பாக்கி! ஓடிப்போய் மேசையைத் திறந்தாள். துப்பாக்கியை எடுத்தாள்.

"டுமீல்! டுமீல்!" என ஒலி கிளம்பிற்று.

"அய்யோ! அய்யோ!" என்ற அலறல்.

நாராயணி திகைத்தாள். அது அய்யரின் குரல் அல்ல! நாயுடுவின் குரல்தான்! ஓடிப்போய்ப் பார்த்தாள். நாயுடு அறை வாயிற்படியிலே சுருண்டு கிடந்தார். அய்யரோ எந்த ஆபத்துமின்றி, கட்டிலுக்கடியிலே ஒளிந்திருந்தார். நாயுடுவைக் கொன்றுவிட்ட நாராயணி அவர்மீது விழுந்து புலம்பினாள்.

நகரசபைத் தலைவர் தேர்தலைப் பற்றிய கவலையைக்கூட ஒதுக்கி வைத்துவிட்டு, அதற்குள் ஒரு முறை நாராயணியைப் பார்க்க ஓடிவந்த நரசிம்ம நாயுடு, எதிர்பாராத வகையிலே நாராயணியாலேயே சுட்டுக் கொல்லப் பட்டார். ஆனால், போலீசார் அப்படி வழக்கு பதிவு செய்யவில்லை. அவர்கள் அய்யரை வீரராக்கி விட்டார்கள். கட்டிலுக்கடியிலே ஒளிந்து மயங்கிக் கிடந்த அய்யர் தான் நரசிம்ம நாயுடுவை சுட்டுக் கொன்று வஞ்சம் தீர்த்துக்கொண்டார் என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

ஆயுள் தண்டனை! அந்தமட்டில் ஆண்டவன் நாராயணியின் துப்பாக்கி முனையிலிருந்தும், நீதி மன்றத்தின் தூக்குத் தண்டனையிலிருந்தும் தன்னை விடுவித்தானே என்ற மகிழ்ச்சி அய்யருக்கு! நாராயணியோ, அனாதையானாள். அய்யரோடு குடும்பம் நடத்திய வரையில் "நாராயணி அம்மாமி!" என்று ஊரார் அவளை அழைத்தனர். நரசிம்ம நாயுடு பிரவேசித்த பிறகு, "மிஸஸ் நாயுடு" என்று ஊர் கூறியது. இப்போது அவள், —'நடுத்தெரு நாராயணி' ஆகிவிட்டாள். முன்பெல்லாம், நடுத்தெரு நாராயணி என்றால் அவள் இருக்கும் தெருவைக் குறிக்கும்—இப்போதோ?......... நடுத்தெருவுக்கு அர்த்தமே வேறு!—

*

என்னதான் நாராயணியின் வாழ்க்கை கெட்டு விட்டாலுங் கூட, அவளது மனதிலே நரசிம்ம நாயுடுக்கு நல்லதோர் இடமுண்டு. அற்பபுத்திக்கார அய்யரைக் கொல்லப் போய் ஆசைநாயகனையல்லவா கொன்று விட்டாள், அவசரத்திலும் — ஆவேசத்திலும்! பாமாவினால் கொல்லப் பட்டதாக சித்தரிக்கப்பட்ட நரகாசுர வதைப் படல ஊர்வல ரதத்தைப் பார்க்கும்போது அவளுக்கு, தான் செய்த கொலைதான் ஞாபகத்திற்கு வருகிறது. அதனால்தான் தீபாவளி தினத்திலே அவள் அப்படி சோகமாக அமர்ந்திருந்தாள் போலும்!

(முற்றும்)

★ மாளிகையும் - மண் குடிசையும்! ★

மாளிகையில்—

பண்ணையார் கண்ணயர்ந்தபடி படுத்திருந்தார். அவரைச் சுற்றியிருந்த பக்தகோடிகள் ஒவ்வொருவராக வெளியேறிக் கொண்டிருந்தனர். ஓமக் குண்டத்தின் புகை இப்பொழுதுதான் கொஞ்சம் ஓய்ந்திருந்தது. வெளியே சென்று கொண்டிருந்த பக்தர்கள் விலாப் புடைக்க உண்ட உணவின் சுவையையும், விருந்திட்ட பண்ணையாரின் வள்ளன்மையையும் வானளாவப் புகழ்ந்துகொண்டு சென்றனர்.

பண்ணையாரின் கோரிக்கையை ஆண்டவனுக்கு அறிவிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 'அவர்கள்' கிடைத்ததையெல்லாம் சுருட்டிக்கொண்டு வெளியே நடையைக் கட்டினர். பண்ணையாரின் மாளிகையின் வெளிப்புறத்தில் ஏதாவது மிச்சம் மீதி கிடைக்காதா என்று வேலையாட்கள் காத்துக்கிடந்தனர். எச்சில் இலைக்காக ஏங்கி நின்றனர் பிச்சைக்காரர்கள்!

பண்ணையார் வீட்டில் இன்று 'விசேஷம்'! அவருக்குத் திருமணமாகிப் பல ஆண்டுகளாகியும் பாலகன் இல்லையே என்ற குறையைத் தீர்க்க, போன ஆண்டுதான் புத்திரன் பிறந்தான். பிறந்த ஓராண்டுக்குள் குழந்தை ஒரு நூறு தடவையாவது சாவுடன் போராடிப் பிழைத்திருப்பான். பண்ணிய வைத்தியம் பலிக்கவில்லை. பண்ணையாரின் மனக்குறை மட்டும் அவர் உடல்போல் வளர்ந்துகொண்டிருந்தது. சாஸ்திரம் பயின்றவர்களை, சஞ்சலம் தீர்க்கும் மார்க்கம் கேட்டார். அவர்கள் கூறினர்கள், வேதபுரியினர்தான் தக்க உபாயம் சொல்ல முடியுமென்று. வேத பண்டிதர்களை வரவழைத்தார்; வேண்டியன செய்யும்படி உத்தரவிட்டார்.

அவர்கள் திட்டம் வகுத்தார்கள், 'ஆயுள் ஓமம்' வளர்த்தால், ஆண்டவன் திருப்திப்பட்டுக் குழந்தையின் ஆயுளை நீடிப்பானென்று. ஓமக் குண்டம் ஓங்கி வளர்ந்தது! ஓராயிரம் பூசுரர் வயிறார உண்டு, பெறவேண்டிய தானத்தைப் பெற்று, பெறற்கரிய பண்ணையாரின் செல்வத்தை வாழ்த்தினர். குழந்தையின் ஆயுள் பலம் பெற்றதோடு, தன்னுடைய பெயரும் விளம்பரம் பெற்றதாகப் பண்ணையார் திருப்தியடைந்தார். 'பக்தர்களை' உபசரித்த களைப்பினால்தான், முன்னே குறிப்பிட்டபடி கண்ணயர்ந்தார்.

★

மண் குடிசையில்—

பண்ணையார் வீட்டுத் தெருக்கோடியில் இருந்த மண் குடிசையில், கிழவன் இருமிக் கொண்டே படுத்திருந்தான். ஏழ்மையின் தொல்லை ஓர்புறம், நோயின் உபாதை மற்றொரு புறம் அவனை வருத்தியது. அவன் பக்கத்திலிருந்து பணிவிடை செய்து கொண்டிருந்தாள் அவன் பேத்தி, தங்கம்! அவர்கள் இருவரும் ஒருவருக்கு மற்றவர் ஆதாரம். ஏழ்மைதான் அவர்களது பரம்பரைச் சொத்து. பலமிருந்த வரையில் கிழவன் வஞ்சனையின்றி உழைத்தான். அவன் பெற்ற ஊதியம் இரண்டு ஜீவன்களுக்குப் போதுமானதாயிருந்தது. அதனால், தங்கம் வெளியே சென்று வேலை செய்ய அவன் அனுமதிக்கவில்லை. பருவம் கொழிக்கும் அவளுடைய பளபளப்பான மேனி, எங்கே அவ்வூர் பெரிய மனிதர்களின் பருந்துப் பார்வையில் பட்டுவிடுமோ என்று பயந்தான் அவன். 'அழகு பெரிய இடத்தில் இருந்தால் அதற்குப் பணம் என்ற பாதுகாப்பு உண்டு. ஏழையின் அழகு வேலியில்லாத தோட்டம்' என்ற உண்மையைக் கிழவன் நன்கு அறிந்திருந்தான். மாணிக்கத்தை அணிவிப்பதற்குத் தகுந்த மகுடம் கிடைக்கும் வரையில் அதை மறைத்து வைக்க எண்ணினான். ஆகவே வயதுவந்த தங்கம் குடிசையை விட்டு வெளியேறுவதையும் அவன் விரும்பவில்லை.

ஆனால், இன்று அவன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தான். வீட்டில் உண்ண உணவில்லை; ஒட்டி உலர்ந்துபோன அவன் வயிறு, அவன் உயிருக்குச் சீட்டுக் கொடுத்தனுப்பத் தயாராக இருந்தது. அவன் புலம்பிக் கொண்டிருந்தான். பெற்றோரின் முகமறியாப் பச்சிளங் குழந்தையாக இருந்த அன்று முதல், அழகுகொழிக்கும் பதினாறு வயதுப் பாவையாக இருக்கும் இன்று வரை, தன்னைப் பேணி வளர்த்த கிழவன் துடிப்பதைப் பார்த்து மனம் சோர்ந்தாள் தங்கம். அவன் உயிர் காக்க உதவி தேடப் புறப்பட்டாள். வெளியே பண்ணையாரின் வீட்டை நோக்கி நடந்தாள். மண் குடிசை தன் வாழ்க்கைக்கு மாளிகையை நம்பித்தானே ஆகவேண்டும்?

பி.சி.கணேசன், பி.எஸ்ஸி;பி.டி.

✶

மாளிகையில்—

மாலை மங்கி எங்கும் இருள் படர்ந்திருந்தது. பண்ணையார் பந்தலில் காற்று வாங்கிக் கொண்டிருந்தார். பக்கத்தில் கனகய்யர், அன்று நடந்த வைபவத்தில் ஆன செலவுகளுக்குக் கணக்குக் காட்டிக் கொண்டிருந்தார்.

"ஐயா!"

"யாரது?"

தங்கம் பேசவில்லை. என்ன பேசுவது என்று அவளுக்குப் புரியவில்லை. கனகய்யர் அவளை ஏற இறங்கப் பார்த்தார். கனிந்து புசிப்பதற்கு ஏற்ற பக்குவம் பெற்றிருக்கும் இக்க(ன்)னி, இதுவரை எப்படி மறைந்திருந்தது என்றுஎண்ணமிடலானார். பண்ணையாரின் காதில் 'மந்திரம்' ஓதினார் ஐயர்! பண்ணையார் பல்லை இளித்தார்; தங்கம் கிழப்பாட்டனின் நிலையை எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தாள்!

தங்கம்—அதைக் கிழவனின் பேத்தி—கிழவன் மரணப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறான் – இவைகளைக் கனகய்யர் தங்கத்திடம் பக்குவமாகப் பேசிப் புரிந்து கொண்டார். மண் குடிசையில் மதிப்பாரற்றுக் கிடந்த தங்கம், மாளிகையில் அவளுக்குக் கிடைத்த மரியாதைகளைக் கண்டு பிரமித்துப் போனாள்!

உலகத்தின் கண்களிலிருந்து தங்கத்தை ஒளிக்க எண்ணிய கிழவன், உண்மையில் அவளை உலகமறியாச் சிறுமியாக்கி வைத்திருந்தான். மாளிகை செய்யும் உபசாரம் மானத்தை பறிக்கச் செய்யும் மர்மமான சடங்கு என்பதை அறியும் அளவுக்கு அவள் மனம் பக்குவமடையவில்லை. அவள் எண்ணம் கிழவனைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

பண்ணையார் சிரித்து சிரித்துப் பேசினார். ஆணையிடவேண்டிய அவர் ஏன் குழைந்து பேசவேண்டும், ஏழைகள் என்றாலே எரிந்து விழும் அவர் இனமுகங் காட்ட வேண்டிய அவசியம் என்ன, தாழ்ந்தோரை தன் வாயிற்படியையும் மிதிக்கவிடாதவர் இன்று ஏன் தன்னை மாடியின் தனியறையில் சந்தித்துப் பேசவேண்டும்—இம் மாதிரிக் கேள்விகள் அவள் மனதில் எழவில்லை. அவள் முன் ஒரே பிரச்சினைதான் நின்றது — அவள் பாட்டனைக் காப்பாற்றப் பண்ணையார் செய்யப் போகும் உதவியென்ன?

பண்ணையார் சம்பந்தமில்லாமல் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். அவள் மனம் குழம்பியது. அப்பொழுதுதான் தங்கம் உணர்ந்தாள், பண்ணையாரையும் அவளையும் தவிர, அங்கே வேறொருவரும் இல்லை யென்று! இதுவரையில் அவர்கள் பேச்சில் கலந்து கொண்டிருந்த கனகய்யரும் கம்பி நீட்டியிருந்தார்! உலகமறியாத் தங்கம் உலகத்தின் உண்மை உருவத்தை உணர்ந்தாள்: பண்ணையாரின் குழைவான பேச்சு இரக்க உணர்ச்சியால்பிறந்தவையல்ல; இழிந்த உணர்ச்சியின் ஏமாற்றுச் சொற்கள் என்பதை நொடிப் பொழுதிலே உணர்ந்தாள். அங்கே தாமதித்தால் என்ன ஏற்படும் என்பதை அறிந்த அவள், வெளியே ஓடத் திரும்பினாள் — வெளியே கனகய்யர் முன் யோசனையோடு கதவைத் தாளிட்டிருந்தார்!!

மண் குடிசையில் கபடமற்ற உள்ளத்துடன் வாழ்ந்த அச்சிறுமி, மாளிகையில் திரை மறைவில் நடக்கும் வெறி விளையாட்டுக் கருவியானாள்!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

புதையல்

மு. கருணாநிதி

சென்றஇதழில் .....

தெருக் கூத்து நடக்கும் போது, தாண்டவன் வெறியாட்டம் போட்டபடி வருகிறான்; பரிமளா துரை இருவரையும் கொன்று விட்டேன் என்ற முழக்கத்துடன்! இருவரின் ரத்தத்தையும் கொண்டு வந்திருப்பதாக ராமன் அங்கு வருகிறான். அம்பலம் அதை வாங்கிக் கொண்டு கிணற்றடிக்குப் போய் அதைத் தெளிக்கிறார். ஒரு பெட்டி கிடைக்கிறது. அதைத் திறந்து பார்த்தால் 'மனதைப் பொன்னாக்கிக் கொள்' என்ற அறிவுரை மட்டுமே இருக்கிறது. ஏமாற்ற மடைந்த அம்பலம் மாயாண்டிக் கிழவரைப் பழி வாங்கத் தேடுகிறார்.

49

கடல் நோக்கி!

மாயாண்டியைக் காண வில்லை யென்றதும் அம்பலம் தன் ஆட்களுடன் வீடுநோக்கி விரைந்தார். வீட்டின் பக்கமிருந்து ஜுவாலை தெரிவதைக் கண்டு திடுக்கிட்டார். "அது என்ன ஜுவாலை" என்று அவர் கேட்பதற்குள், யாரோ இருவர் அவர் எதிரே ஓடிவந்து, "எஜமான்! எஜமான்!! நம்ப வீட்டைக்கொளுத்திவிட்டார்கள்!" என்று அலறினார்கள். அம்பலம் ஆத்திரத்தோடு ஓட ஆரம்பித்தார். முரடர்களும் கூடவே ஓடினார்கள். ராமனுக்கு மாத்திரம் இந்தச் சேதி அவ்வளவு பரபரப்பை அளிக்கவில்லை. தலையை ஆட்டிக் கொண்டு சற்று மெதுவாகவே நடந்தான் அவன்.

வெள்ளியம்பலம் வீதி முனையில் இருந்தபடி வீட்டை அண்ணாந்து பார்த்தார். தேர் எரிவது போல் வீடு எரிந்து கொண்டிருந்தது. மேகங்களைத் தொடுவதற்கு தீ நாக்குகள் முயற்சித்துக் கொண்டிருந்தன, அம்பலம் அப்படியே அசைவற்று நின்றார் ஊர்மக்கள் அனைவரும், தெருக் கூத்தை எப்படி ரசித்துக் கொண்டிருந்தார்களோ; அது போலவே தீ எரிவதையும் ரசித்துக்கொண்டு நின்றார்கள். கட்டப்பட்டு நிற்கும் தாண்டவனின் குரல் மட்டும் ஆவேசமாக ஒலித்தது.

"எரியட்டும் – மாப்பிள்ளையும் பெண்ணும் மங்களகரமாக எரிந்து சாம்பலாகட்டும்! நான் வெட்டிப் போட்ட இரண்டு பிணங்களுக்கும் வெள்ளியம்பலம் வீடுதான் சரியான சுடுகாடு!—மருங்கப்பள்ளத்து மக்களே! நாளைக் காலையிலே எல்லோரும் தயாராக வந்து விடுங்கள்—இந்த மயானத்திலேதான் மாப்பிள்ளை பெண்ணின் ஆத்மா சாந்தி அடைய பால் தெளிக்க வேண்டும், புரோகிதர்கள் யாராவது இருந்தால்—இன்று முதல் பதினாராம் நாள் காலையிலே வந்து விடுங்கள்! கருமாதிக்கு தட்சணை தரப்படும்! கொத்தனார்களே! நீங்களும் கேளுங்கள்—நெருப்பிலே சாம்பலாகப்போன காதலர்களுக்கு இங்கே தான் நினைவு மண்டபம்எழுப்பவேண்டும்—இப்போதே அதற்கான கூலியை அம்பலத்திடம் பேசிக் கொள்ளுங்கள்!...... ஹஹஹ... ஹே அம்பலம்! என்னை எதிர்த்தா என் மகளுக்குக் கல்யாணம் செய்கிறாய்—முடிந்ததா உன்னால்?...அதோ பார்— ஆனந்தமாக எரிகிறது உன் வீடு!"

தாண்டவன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்க அம்பலத்தால் முடியுமா? தீயினும் கொடிய வார்த்தைகளாக அல்லவா அவைகள் இருந்தன! அவரது பலங்கொண்ட மட்டும் தாண்டவனை அறைந்தார் கன்னத்திலே அறை விழுந்ததும், தாண்டவனின் கட்டுக்களும் தெரித்தன. அம்பலத்தின்மீது பாய்ந்தார், இருவரும் தெருவிலே உருண்டனர். தாண்டவனை முரடர்கள் சூழ்ந்து கொண்டு தாக்கினர்.

தாண்டவனிடமிருந்து விடுபட்ட அம்பலம், ஊர் மக்கள் மீது சீறி விழுந்தார். வீட்டை அணைப்பதற்கு யாரும் முன்வராமல் வேடிக்கைப் பார்ப்பதாக அவர் எண்ணினார்.

"இந்த ஊர் பசங்கள் அத்தனை பேரையும் விரட்டுங்கள்!"என்று ஆட்களுக்குக் கட்டளை யிட்டார். முரடர்களும் ஊர் மக்கள் மீது பாய்ந்தனர். அம்பலத்திற்கு என்ன செய்வது, என்ன சொல்வது என்றே புரியவில்லை. "மாயாண்டியை யாருடைய வீட்டிலே ஒளித்து வைத்திருக்கிறீர்கள்—மரியாதையாகச் சொல்லி விடுங்கள்!" என்று வரட்டுக் கூச்சல் போட்டார்,

யாரிடமிருந்தும் பதில் வரவில்லை. அவருக்கு, மாயாண்டி தன்னை ஏமாற்றிவிட்ட கோபம் வேறு—வீடு எரிந்த சோகம் வேறு-தாண்டவன் தன்னை எதிர்த்து வெற்றி பெற்றுவிட்டானே என்ற அவமானம் வேறு-இவ்வளவுக்கும் மேலாக அந்தப் பிணங்களையும் காண முடியாத காரணத்தால் ஏற்பட்ட குழப்பம் வேறு-எல்லாம் சேர்ந்து, அவர் எல்லா வீடுகளையும் சோதனை போட்டு மாயாண்டிக் கிழவனை கண்டு பிடிக்குமாறு உத்திரவு போட்டார். முரடர்களுக்குக் கேட்கவா வேண்டும்! வீடுகளை முற்றுகையிட்டனர். சட்டிப் பானைகள் வெளியே வீசப்பட்டன கூறைகள் பிய்த்தெறியப் பட்டன. குழந்தைகள் தூக்கி எறியப்பட்டனர். பெண்கள் இழிவாக நடத்தப் பட்டனர். கிராமமே அல்லோலகல்லோலப் பட்டது. வயதானவர்கள் வாலிபர்கள் என்று பாராது எல்லோரையும் பந்தாடிப் பரவசப் பட்டனர் அம்பலத்தின் ஆட்கள்!

அம்பலத்தின் ஆட்களை எதிர்க்கும் திராணியற்று மூலைக்கொருவராக ஓடினர் மக்கள். இதுதான் சமயமெனக் கண்ட காலிகள் தாங்கள் கண் வீசி வைத்திருந்த கன்னிப் பெண்களின் கற்பைச் சூறையாடிக் களித்தனர். மருங்கப்பள்ளம் பிணக் காடாக மாற வேண்டும் என்ற நோக்கத்தோடு அம்பலம் தன் ஆட்களைத் தட்டிக் கொடுத்தார். தனக்குத் தாண்டவனால் ஏற்பட்ட அவமானத்தைப் பற்றி பேசுவதற்கு மருங்கப்பள்ளத்திலே யாரும் மிச்சமிருக்கக் கூடாது என்பது அவரது எண்ணம்.

முரடர்களின் படை தாண்டவனின் வீட்டிலேயும் நுழைந்தது அவர்களை வீட்டுக்குள்ளே நுழைய வொட்டாமல் தாண்டவன் தடுத்தார். அவரது தலையிலும், கை கால்களிலும் சரியான காயங்கள் ஏற்படவே, தாண்டவன் ஓடிவிடுவதைத் தவிர வேறுவழியில்லாமற் போயிற்று!

தாண்டவன் ஓடியதும்—அந்தத் தடியர்களை அஞ்சலை எதிர்த்தாள், தன் கண்ணீரால்! அவர்களுக்கு கண்ணீரின் மதிப்பு தெரியாதே—அதனால் அஞ்சலையைத் தூர எறிந்து விட்டு வீட்டுக்குள்ளே நுழைந்தனர். மாயாண்டியைத் தேடுவதற்கு! வீடெங்கிலும் சூறையாடினர்-மாயாண்டி காணப் படவில்லை. பலகையால் செய்யப்பட்ட சதுரமான குதிர் ஒன்று இருந்தது அதிலே முரடர்களின் கோடரிகள் பாய்ந்தன. குதிர் பிளக்கப் பட்டது. அதற்குள்ளே யிருந்து "ஆ!" என்ற பெண்ணின் குரல் கேட்டது, அனைவரும் திடுக்கிட்டனர்.கோடரியினால் காயம்பட்ட பரிமளாவை அணைத்தபடி துரை, வெளியே வந்தான். முரடர்கள் சற்று நேரம் திகைத்தனர். துரை, அவர்களை எதிர்க்கத் தொடங்கினான். அவனுடைய கம்பு வீச்சுக்கு முன்னே நிற்கமாட்டாமல் முரடர்கள் ஓடினார்கள்.

அவர்களைத் துரத்தியபடி துரையும் ஓடிவந்தான். ஓடிய முரடர்கள், துணைக்கு ஆட்களை அழைத்தார்கள். துரைக்கும் அவர்களுக்கும் கடுமையான சண்டை — அவர்களிடமிருந்து விடுபட்ட துரை, ஓடிக் கொண்டிருக்கும் ஊர்மக்களைத் தடுத்து நிறுத்தி, "கோழைகளே! ஏன் ஓடுகிறீர்கள்? வெள்ளியம்பலம் என்ன, இந்த ஊருக்கு ராஜா வா? வெட்கமில்லையா உங்களுக்கு? உங்களது இரும்புக் கரங்கள், அந்த இருதயமற்றவனின் முகத்துக்கு நேரே உயரட்டும்!—அவனை எதிர்க்க யாரும் அஞ்சாதீர்கள்! எனக்கும் பரிமளாவுக்கும் அவன் நடத்திய திருமணம் — நல்ல எண்ணத்தோடு நடத்தப்பட்டதல்ல—புதையலை எடுப்பதற்கு புதுமணத் தம்பதிகளின் ரத்தம் வேண்டும் அவனுக்கு' அதனால் தான் அவ்வளவு அக்கறையோடு அவன் அந்த விவாகத்தை நடத்தினான். எங்களைக் கொன்றுவிட்டு அந்தப் பழியை தாண்டவன் மீது போடவும் திட்டம் தயாரித்தான்—மாயாண்டிக் கிழவரின் தந்திரமான திட்டங்களால்—தாண்டவனின் உள்ளம் மாற்றப்பட்டு, நாங்களும் தப்பினோம்—தப்பிவிட்ட எங்களையும், தவறு எதுவும் செய்யாத உங்களையும்—தாக்குமாறு கட்டளையிட்டு காட்

ராஜா தர்பார் நடத்தும், அந்தக் கயவனை எதிர்த்து முஷ்டியை உயர்த்துங்கள்! உம்—மருங்கப் பள்ளத்து மக்கள் மானமில்லாதவர்கள் என்ற பட்டம் பெருதீர்கள்! கோழைகளாய்—மோழைகளாய்த்திரிய எண்ணுதீர்கள் உங்களுக்குத் துணையாக நான் இருக்கிறேன் — அதோ, என் நண்பன் ஆனந்தனும் மற்றவர்களும் வருகிருர்கள். அவர்கள் மிகவும் தைரியசாலிகள்! அம்பலத்தின் வீட்டிலேயிருந்து எங்களை மீட்ட சகாய சூரர்கள்! அவர்களும் நம்மோடு சேர்ந்து கொள்வார்கள்! உம்—ஓடாதீர்கள்—எதிர்த்து நில்லுங்கள்!" என்று வீராவேசத்தோடு பேசினுன்.

அதற்குள் ஆனந்தன் கோஷ்டியாரும் அங்கு வந்து சேர்ந்தார்கள் அவர்கள் அனைவரும் நிற்குமிடம் நோக்கி முரடர்களின் படையும் பாய்ந்து வந்தது. இப்போது ஊர்மக்கள், துரையின்தலைமையிலே முரடர்களை எதிர்க்கத் துணிந்தார்கள். மருங்கப்பள்ளம் போர்க்களம் போலக் காட்சியளித்தது. அம்பலமும் அந்தக் களத்திற்கு வந்து சேர்ந்தார் துரை உயிரோடு இருப்பதைக் கண்டு அவர் ஆச்சரியத்தில் முழுகினுர்.

"என்னைப் பார்த்துமட்டும் ஆச்சரியப்படாதே அம்பலம்! அதோ பார் என் பரிமளாவை'" என்று சுட்டிக் காட்டி, அவளை எடுத்து அணைத்துக் கொண்டான் துரை.

பரிமளாவின் தலையிலே, கோடரி காயத்தினுல் ரத்தம் வழிந்தபடியிருந்தது.

"என்ன திகைக்கிருய், தீயவனே! நீ கட்டிய கோட்டையெல்லாம் பொடிப் பொடியாகி விட்டது! தாண்டவனைக் கொலைகாரராக நிறுத்திவிட்டு, எங்கள் குருதியைத் தெளித்துப் புதையலைக் கொள்ளை அடிக்கத் திட்டம் போட்டாயே; அந்தத் திட்டம் தீயிலே கருகி விட்டதடா பாவி! திருமணம்-தெருக்கூத்து-சோபன முகூர்த்தம்—நடுநிசியிலே பலி! பாதகா, பலி-பலிக்காமல் போய் விட்டதடா! காதல் வெற்றி பெற்றுவிட்டது! நேர்மை ஜெயித்து விட்டது! மாயாண்டிக் கிழவரின் தந்திரங்கள் வாகைமாலை சூடிவிட்டன! என்னுடைய நண்பர்கள், வெட்டிவா என்று ரைத்தால் கட்டி வரும் வீரர்கள். அந்தக் கடமையின் சிகரங்கள்—நினைத்த காரியத்தை செய்து முடித்து விட்டார்கள்! புதையலா வேண்டும் உனக்குப் புதையல்! உனக்கு புத்தி வரட்டும் என்றுதானே : மாயாண்டிக் கிழவர்—மனதைப் பொன்னுக்கிக் கொள்ளும் மந்திரத்தைப் புதையலாகக் கொடுத்தார்! வரவில்லையே; ஏன்? புதையல், இருதய முள்ளவனுக்கு கிடைக்க வேண்டுமடா! உன்னைப் போல காலியான உள்ளத்திலே இருக்கக்கூடியது அல்ல அது என்பதை இப்போதாவது உணர்ந்து கொள்!"

துரை பேசிக் கொண்டே போனுன். அம்பலம் தன் ஆட்களுக்கு ஜாடை காட்டினுர். அவர்கள் அவன் மீது தாவினர் மீண்டும் ரகளை! அப்போது ஒரு ரேக்ளா வண்டியிலே மாயாண்டிக் கிழவர் அந்தப் பக்கமாக வந்தார். வந்தவர், தான் வருவதை அந்தக் கூட்டத்தார் உணர வேண்டுமென்பதற்காக உரக்கக் கனைத்தார்.

அவரை அம்பலம் பார்த்து விட்டார். "அதோ அந்தக் கிழவனைப் பிடியுங்கள்!"என்று கத்தினுர் அம்பலம். ஆட்கள் கிழவர் பக்கம் ஓடினர். கிழவர், ரேக்ளாவை வேகமாக ஓட்டினுர். துரையிடமிருந்து முரடர்களைப் பிரிக்க வேண்டுமென்பதற்காகவே அவர் அப்படிச் செய்தார் என்று அம்பலத்திற்குத் தெரியாது.

ரேக்ளாவைத் துரத்திக் கொண்டு அம்பலமும் ஆட்களும் ஓடினர். அம்பலம் இன்னொரு ரேக்ளாவில் ஏறிக் கொண்டு, கையிலே ஒரு கத்தியுடன் மாயாண்டியின் ரேக்ளாவைத் துரத்தினுர். ஓடிக் கொண்டிருந்த மாயாண்டியின் ரேக்ளாவில், யாருமறியாமல் தாண்டவனும் ஏறிக் கொண்டார்.

எப்படியும் மாயாண்டியைப் பிடித்துவிட வேண்டுமென்ற ஆத்திரத்திலே அம்பலம் தன் ரேக்ளாவை முடுக்கிவிட்டார். முரடர்களைஎதிர்த்து,அவர்களை முழுவதும் விரட்டமுடியாமல் திணறிக் கொண்டிருந்த துரை, மாயாண்டியை அம்பலம் துரத்திக்கொண்டு போவதை அறிந்தான். ஆனந்தனிடம் ஏதோ காதிலே சொல்லிவிட்டு பரிமளாவை அணைத்தபடி வேறு பக்கம் ஓடினுன். அங்கு தயாராக இருந்த ரேக்ளாவிலே அவனும் பரிமளாவும் ஏறிக்கொண்டார்கள் அவனிடம் ஆனந்தன் ஓடிவந்து, "கரையில் படகு தயாராக இருக்கிறது. அதில் ஏறிக்கொண்டு தப்பிவிடுங்கள். நான் போலீசாரை சந்திக்கப் போகிறேன்." என்று கூறினுன். சரியென்று தலையசைத்துவிட்டு, துரை பரிமளாவுடன் ரேக்ளா வண்டியில் புறப்பட்டான்.

மாயாண்டியும், தாண்டவனும் சென்ற ரேக்ளா, மனேரா நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. அம்பலமும் அதைத் தொடர்ந்து வண்டியை முடுக்கிவிட்டார். அதே திக்கில் துரையும் பரிமளாவும் ரேக்ளாவில் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தனர்.

[வளரும்]

★

வேலூரில் மு. க. !

வ. ஆ. மாவட்ட மாநில மாநாட்டு நிதிக் கூட்டம்.

நேரம்: 4—12—55 காலை 10 மணி

இடம்: நேஷனல் டாக்கீஸ்

தலைவர்: முல்லை-சத்தி

சொற்பொழிவாளர்கள்:

மு. கருணாநிதி
எஸ். எஸ். இராஜேந்திரன்

கட்டணம்: ரூ. 1, 0—8—0, 0—4—0.

விரைவில் ஆரம்பமாகிறது !

திராவிட கலாச்சாரம்!

போர்ட் ப்ளேர்,
அந்தமான்,
14—11—55

ஆசிரியர் அவர்களுக்கு,

அந்தமான் தீவுகளிலே பிழைக்க வந்த திராவிட இனத்தவர் சென்ற 5—11—55 அன்று 'சாம்பாஜி' என்ற நாடகத்தை நடத்தினர். அது 'அந்தமான் மைனர் பாரஸ்ட் இண்டஸ்ட்ரியல் சொஸைட்டி'யின் நிருவனத்திற்காக நடத்தப்பட்டது. அதற்கு தலைமை வகித்த அந்தமான் பிரதம காட்டிலாகா அதிகாரி திரு ஜெ. பேனர்ஜி என்பவர், நாடக முடிவில் பேசிய போது, திராவிட மொழி, கலாச்சாரத்தை விளக்கினர். அவரது பேச்சின் சுருக்கம் கீழே வருகிறது.

"இங்கு மலையாளம், வங்காளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் நான்காவதாக தமிழிலும் நாடகம் நடிக்கப்பட்டது. நான்காவதாக நடிக்கப்படுவதால் தமிழ் நாலாந்தர மொழி அல்ல; மொழிகளிலே மிகவும் புராதன மொழி திராவிட மொழி—குறிப்பாக தமிழ் மொழி! தாகூரின் பாடலில் 'பஞ்சாப சிந்து குஜராட்ட மராட்ட திராவிட' என்று திராவிடத்திற்கு 5-வது இடம் கொடுத்திருப்பதை மாற்றி, திராவிட, ஆந்திர என்று திராவிடத்திற்கு முதல் இடம் கொடுத்து அப்பாடலை மாற்றியமைத்தாலும் மிகவும் பொருந்தும். திராவிடர்கள் ஆதிகாலந்தொட்டு நாகரிகம் உள்ளவர்கள் என்பதற்கு மகாபலிபுரம், காஞ்சிபுரம், மதுரை முதலிய இடங்களில் உள்ள கோபுரங்களும், தென்னாட்டில் உள்ள மற்ற பல சின்னங்களும், ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குமுன் புதையுண்டு போன ஹரப்பா, மொகன்சதாரோ போன்ற நகரங்களிலிருந்து வெட்டி யெடுக்கப்பட்டவைகளுமே போதுமான சான்றுகளாகும். இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளும், கலாச்சாரங்களும்—ஆரிய, மொகலாய கலப்பு வாய்ந்தவை; ஆனால் திராவிட-குறிப்பாக தமிழ் மொழியும், திராவிட கலாச்சாரமும் கலப்படமற்றவை யாகும். இன்றைய இந்தியாவில் போற்றக் கூடிய அளவு புத்திக் கூர்மையும், திறமையும் மிக்கவர்கள் தமிழர்கள்தான். அதை நிரூபிக்கும் வகையில் இந்த நாடகம் அமைந்துள்ளது."

இத்தனைக்கும் பேனர்ஜி தென்னாட்டுக்காரருமல்ல; திராவிடர் இயக்க அனுதாபியுமல்ல. எனினும் அவர் பேசியிருக்கிறார், திராவிட நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி எந்த விதத்திலும் தவறானதல்ல என்ற பொருள்பட.

அன்பன்,
செல்வம்.

★

தமிழுக்கு இழிவு-தகாது! தகாது!!

மயிலை
15—11—55

ஆசிரியர் அவர்களுக்கு,

பாட்டாளியின் கூட்டாளியும், மண்ணகத்தின் விண்ணகமாகத் திகழும் ரஷ்ய நாட்டின் பிரதமருமான புல்கானின் நமது தமிழ் நாட்டை சுற்றிப் பார்க்க வருங்கால், அன்னாருக்கு, தமிழ் மொழியே தாய் மொழியாகக் கருதும் நம்மைப் பார்த்து இந்தியில்தான் வரவேற்பிதழ் வாசித்தளிக்க வேண்டும் என நமது ஆளவந்தார்கள் ஆணையிட்டுள்ளனர். ஆனால், அதே தேசியவாதிகள் கவிஞர் தாகூர் அவர்களின் பாடல்களைப் போற்றுகின்றனர்; அவர்தம் புகழ் பாடுகின்றனர். ஒரு சமயம் தாகூருக்கு, மதுரை தமிழ்ச் சங்கத்தின் சார்பாக வரவேற்பிதழ் வாசித்தளிக்குங்கால், அவ்வரவேற்பிதழ் ஆங்கிலத்தில் இருந்தமையால், தாகூர் கோபித்து, "குயிலைப்போல் கிளியும் கூவ நினைப்பது மதியீனமாகும். ஆகவே அது அது அவற்றிற்குரிய சொந்த பாணியிலேயே கூவுதல் வேண்டும்" என்று சினந்துகூறிய சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்ற கொள்கை கொண்டுள்ள நம்மிடம் இந்தியில்தான் வரவேற்பிதழ் வாசித்தளிக்க வேண்டும் என்று கூறுவது எதைக் காட்டுகிறது? நேருவின் பெருந்தன்மையா? அல்லது நம்மவரது அடிமைத் தனத்தையா?

இங்ஙனம்,
வே. தமிழ்மணி.

★

இயக்கப் பற்று மாபெரும் குற்றமா?

ஜோகில்பட்டி,
9-11-55

ஆசிரியர் அவர்களுக்கு,

நானும், எனது உயிர் நண்பர் சண்முகம் என்பாரும் நகர கழக உயர் நிலைப்பள்ளியில் பள்ளிஇறுதி வகுப்பு படித்து வருகிறோம். பணம் படைத்த ஒருவர் ஏதோ இரக்க சிந்தையுடன் கட்டிவைத்திருந்த ஏழை மாணவர் விடுதி எங்கள் தங்குமிடம். தி. மு. கழகப் பற்றுடையோர் நாங்கள் என்ற காரணத்தால், எங்களைப் பழிவாங்கிய பண்பு மறந்தோரின் செயல் கூறவே இக்கடிதம் எழுதுகிறேன்.

எனது நெருங்கிய நண்பர் ஒருவர் விருதை செந்தி குமார நாடார் கல்லூரியில் படித்து வருகிறார். அவருக்கு நான் ஒருமுறை கடிதம் எழுதும்போது, அஞ்சல் அட்டையின் ஒரு புறத்தில் எனது வழக்கப்படி தி. மு. கழகக் கொடியை வரைந்தனுப்பினேன். இச் செயல் பற்றி என்னுடன் பயிலும் மற்றொரு மாணவர் விடுதி அதிகாரியிடம் புகார்செய்துவிட்டார். நான் விசாரிக்கப்பட்டேன். உண்மையைச் சொன்னேன். அதன் முடிவு...? நானும் எனது உடன் பயலும் நண்பரும் இலவச விடுதியிலிருந்து விலக்கப்பட்டோம். நான் செய்த குற்றமென்ன? ஒரு செல்வாக்குள்ள அரசியல் கட்சியின்பால் பற்று கொண்டிருந்தது தவறு?—இந்தக் கேள்விகளுக்கு யார் விடை தருவார்கள்!

அன்பன்,
அ. அருணாசலம்

★

கடிதக் குறிப்புகள்.

தோழர் டி. வி. பொன்னையன், (தோடனேரி) என்பவர், காரைக்குடி பொறியியல் கல்லூரியில் இந்தியக் குடியரசுத் தலைவர் ராஜேந்திரரும், சென்னை கவர்னர் பிரகாசாவும் ஆலமரக் கன்றுகள் நட்டது குறித்து, பொறியியல் மாணவர்களிடையே அதுபற்றிய நுணுக்கங்கள் குறித்து எதுவும் பேசாமல் நேரத்தைப் பாழாக்கும் இச் செயல் புரிந்தது வருந்தத்தக்கது—மரம் நட்டே தென்னகத்து மக்களிடம் அறியாமையை நட்டு, அவர்களை மாக்களாக்க நினைக்கும் செயல் கண்டிக்கத்தக்கது—என்று கருத்து தெரிவிக்கிறார்.

★

தோழர் ஐ. முகம்மது அலி (திருமணி) என்பவர், தான் தி. மு. கழக உறுப்பினர் இல்லை என்றும், ஆனாலும்—சென்னை, திருச்சி போன்ற தமிழக வானொலி நிலையங்களிலே தமிழோசைக்கு முக்கியத்துவம் தரப்படாமல், மும்மூர்த்திகளின் கீர்த்தனைகள் — சமஸ்கிருத உபன்யாசங்கள்—இந்திப் பாடங்கள்—இந்திச் செய்திகள்—இவைகளுக்கு மட்டுமே நல்லிடம் கொடுப்பதைக் கண்டிக்கிறார்.

★

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

கலங்கி நின்ற கண்களுடன் அவர் அப்படியே நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தார். எத்தனையோ நாட்கள் அவர் சோகச் சுமையைத் தாங்காது இந்த மோன நிலையில் ஆழ்ந்து கிடந்திருக்கிறார்.

சற்று நேரம் சென்றது. "என்ன அருணகிரி, என்ன இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்ற குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தார். எதிர் வீட்டுக் கண்ணன் நின்று கொண்டிருந்தார்.

"சும்மாதான்..." என்றார் அருணகிரி.

"அப்ப நீங்க போகலியா, அங்கே?... என்னங்க ஊரே திரண்டு போவுது..."

"எங்கே?..."

"அதான் பைக்கால் திடலுக்கு! இன்னிக்கு உங்க மகன் நாதனை வச்சு சினிமா பிடிக்கிறாங்களாமே; என் மகன்கூட என்னமோ பேர் சொன்னானே ...'அவுட்டோர் ஷூட்டிங்'காம்... அதான்பாக்கப் போறேன்..."

"நான் வரலிங்க..."

"சரி, சரி; நான் போறேன். எனக்கு உங்க மகன் காளைமாட்டோட சண்டை போடறதைப் பாக்க ஆசையாயிருக்கு..."

"என்ன? காளை மாட்டுடன் சண்டையா? என் மகனா? ஐயையோ!..."—'குபீர்' என்று எழுந்தார் அருணகிரி. 'காளைமாட்டுடன் சண்டை; காளை மாட்டுடன் சண்டை' என்று அவர் உதடுகள் துடித்தன. மறுகணம் வழக்கமாக எடுத்துக் கொள்ளும் மேல் துண்டை மறந்தார். ஊரின் எல்லையில் உள்ள பைக்கால் திடல் நோக்கி ஓடினார். அந்த ஓட்டத்தைப் பார்த்து தெருவில் உள்ளவர்கள் ஏதும் புரியாது திகைத்தனர்.

★

பைக்கால் திடலில் ஏகக் கூட்டம். திடலின் மத்தியிலே படமெடுப்பதற்கான கருவிகள் இருந்தன. கொழுகொழுவென்று ஒரு பயங்கர காளைமாடு தயாராக நின்றது. கிராமத்துச் சிறுவன் வேஷத்தில் நின்றான் நாதன். வெறி கொண்ட மாடு அது; அதை அடக்கி ஊராரின் புகழைப் பெற வேண்டும் அவன் — இதுதான் கதை அமைப்பு!

படப்பிடிப்பு துவங்கியது. திடலின் மத்தியில் நாதன் நடுங்கும் உடலுடன் நிறுத்தப்பட்டான். 'உஸ்...உஸ்' என்று சீறிக்கொண்டு பாய்ந்தது காளை. நாதன் அதன் கொம்பைப் பிடித்தான். ஆனால்... நன்றாகப் பழக்கப்படுத்தப்பட்டிருந்தும் அந்த மாடு, தன்னுடைய இயற்கை குணத்தை இழக்க விரும்பவில்லையோ என்னவோ, நாதனைக் கொம்பால் விசிறி எறிந்தது.

'ஓகோ' என்ற கூச்சல் கூட்டத்திலிருந்து எழும்பியது. படமெடுப்பவர்கள் பயந்தார்கள். பின்னுக்கு நடக்க ஆரம்பித்தார்கள். கீழே தலை குப்புற விழுந்த நாதனை நோக்கி கொம்பைச் சாய்த்துக் கொண்டு பாய்ந்தது கோபக்கார காளை.

"ஐயோ, டைரக்டர்" என்று அலறினான் நாதன். டைரக்டர் நடுங்கினார்; இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. காளை பாய்ந்தது. நாதன் மீண்டும் அலறினான்; மயக்கமுற்றான். அப்போது கூட்டத்தை விலக்கிக் கொண்டு பாய்ந்தார் அருணகிரி. "ஐயோ, நாதா!" என்ற அவரது கதறல் அபாயசங்கு போல் அலறியது. பாய்ந்த மாட்டின் கொம்புகள் அருணகிரியின் வலுவான கரங்களில் சிக்கின; தாக்கினார் அருணகிரி. மாடு களைத்தது. சிறிது நேரப் போராட்டத்திற்குப் பிறகு தனது கூரிய கொம்புகளால் அருணகிரியின் மார்பிலே சிறுகாயத்தைப் பொறித்துவிட்டு ஓடியேவிட்டது. மயக்கமுற்றுக் கிடந்த மகனிடம் ஓடினார் அருணகிரி. அவனை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அழுதார்; 'கோ'வென்று கதறினார்.

★

முடிவில் மகிழ்ச்சியான செய்தி ஒன்று சொல்லப் போகிறேன்: அகந்தையும், ஆணவமும் அன்புக்குத் தலை வணங்கியே தீர வேண்டும்—இந்த பெருண்மையை நாதன் நிரூபித்துக் காட்டி விட்டான். இப்போது அருணகிரி 'எனக்கென்ன கவலை, என் மகன் இருக்கும்போது?' என்று எண்ணி மகிழ்கிறார். மகனுக்கு நற்புத்தி கிடைத்த அந்த நாளிலிருந்து அவரது நெஞ்சிலே ஒரு அழிக்க முடியாத தழும்பும் காட்சி அளிக்கிறது!

—சொர்ணம்

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக

★ இரண்டாவது மாநில மாநாடு ! ★

(போட்டோ: சாமுவேல்)

★★★

1. மாநாட்டில் மாணவர் சமுதாயத்தை எதிர்நிறுத்தி அறிஞர் அண்ணா அவர்கள் சிறப்புரை வழங்குகிறார்கள்.

2. புன்னகை தவழும் முகத்துடன் பொறுப்பிலிருந்து விடைபெறுகிறார் மாணவர் கழக செயலாளர் மதியழகன்.

3. மாநாட்டில் தோழர் என். வி, நடராசன் பேசுகிறார்.

4. மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவரும், சட்டக் கல்லூரி மாணவருமான தோழர் டி. கே. பொன்னுவேல்.

5. மாநாட்டு செயலாளர்களில் ஒருவரும் பச்சையப்பன் கல்லூரி மாணவருமான உ, பில்லப்பன்.

6. மாநாட்டினை திறந்து வைத்து பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் சிறப்புரை வழங்கினார்.

7. மாணவர்களுக்கு 'வெல்லச்சொல்' வழங்குகிறார் நாவலர் நெடுஞ்செழியன்.

★★★

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழு!

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் வலிவும், பொலிவும் பெற்று கட்டுக்கோப்புடன் செயல்பட, மத்திய அமைப்பாக உருவாவதற்கு ஆவன செய்து முடிக்க கீழ்க்கண்ட குழுவினரை மாநாடு நியமித்திருக்கிறது:

டி. கே. பொன்னுவேலு, அமைப்பாளர். உ. பில்லப்பன், சு. ஆறுமுகம், (பச்சையப்பன் கல்லூரி); மா. பாண்டியன், (மதுரை); தி. வீரன், (காஞ்சி); செழியன், சி. டி. தண்டபாணி, (கோவை); வி. சிவப்பிரகாசம், (சேலம்); மாறன்; தில்லை—வில்லாளன், கு. வளவன், (அண்ணாமலை நகர்); நாகராசன், (புதுக்கோட்டை).

இக் குழுவிற்கு, மேற்கொண்டு உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ள மாநாடு அதிகாரம் அளித்திருக்கிறது. தி. மா. மு. க, இல்லாத இடங்களில், புதிய கழகங்களை தோற்றுவிக்கவும், திரவிய கழகங்களை தலைமை நிலையத்துடன் பதிவு செய்து கொள்ளவும், கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளி, மாணவர்கள் ஆகியோரை மாநாடு கேட்டுக்கொள்கிறது.

வடாற்காடு மாவட்டத்தில் கருணாநிதி!

மாநில மாநாட்டிற்கு மாவட்டத்தின் காணிக்கை!

கண்ணமங்கலத்தில் நண்பகலில் மகத்தான வரவேற்பு!

20—11—55 அன்று மாலை 3-மணிக்கு தோழர் கருணாநிதி கண்ணமங்கலம் வந்து சேர்ந்தார். மேளவாத்தியம் முழங்க, வாழ்த்தொலிகள் விண்ணதிர, தி. மு. க. தோழர்களும், பொது மக்களும், கருணாநிதியை வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். பாஞ்சாலி மைதானத்தில் மாவட்ட செயலாளர் தோழர் முல்லை சத்தி அவர்கள் தலைமையில் நிதி அளிப்பு விழா துவங்கிற்று. தோழர் போளூர் சுப்பிரமணியம் அவர்கள் பேசிய பின், தோழர் மு. கருணாநிதி சிறந்ததோர் சொற்பொழிவாற்றினார். கண்ணமங்கலம் தி.மு.க. சார்பில் மாநில மாநாட்டிற்கு ரூ 101 அளிக்கப்பட்டது. தோழர் அண்ணாமலை நன்றிகூற, கூட்டம் முடிந்தது.

மாநில மாநாட்டிற்கு போளூரின் பங்கு!

கண்ணமங்கலம் கூட்டத்தை முடித்துக் கொண்டு மாலை 5—மணிக்கு கருணாநிதியும், மற்ற தோழர்களும் போளூர் வந்து சேர்ந்தனர். மாலை 6 மணிக்கு, முல்லை சத்தி அவர்கள் தலைமையில் கூட்டம் துவங்கிற்று. போளூர் தி. மு. க. சார்பிலும், போளூர் வட்டத்திலுள்ள கிளைக் கழகங்களின் சார்பிலும், வாழ்த்திதழ்கள் வாசித்தும், மாலைகள் அணிவித்தும் கருணாநிதியை வரவேற்றனர். போளூர் சுப்பிரமணியம் அவர்கள் கருணாநிதியை வரவேற்று பேசிய பின், கருணாநிதி வரவேற்புக்கு பதிலளித்து மாநில மாநாட்டை குறித்தும், இன்றைய அரசியல் பிரச்சினைகளையும் விளக்கினார். போளூர் தி. மு. க. சார்பில், மாநில மாநாட்டிற்கு ரூ. 101 அளிக்கப் பட்டது. சேத்துப்பெட் தி. மு. க. சார்பில் ரூ. 25-ம், கண்ணனூர் தி. மு. க. சார்பில் ரூ. 20-ம், திருமணி தி. மு. க. சார்பில், ரூ. 20-1-0-ம், எழுவாம்பாடி தி. மு. க. சார்பில் ரூ 6-5-0-ம், புதூர் தி. மு. க. சார்பில் ரூ 21-ம், போளூர் மாவு மில் தொழிலாளர்கள் ரூ 3-2-6-ம், பூக்கடைத் தோழர்கள், ரூ. 1-9-3 ம் மாநில மாநாட்டிற்கு நிதியாக அளித்தார்கள். செயலாளர் கிருஷ்ணன் நன்றி கூறியவுடன் கூட்டம் முடிவடைந்தது. உள்ளூர் பிரமுகர்களும், வெளியூர் தோழர்களும், தோழர் கருணாநிதிக்கு மாலையிட்டு இயக்க சம்மந்தமாகப் பேசிச் சென்றார்கள்.

கடலாடியில் தி. மு. க. திறப்பு விழா.

21-11-55 அன்று காலை 8—மணிக்கு, தோழர் கருணாநிதியும், மற்ற தோழர்களும், கடலாடி பொது மக்களால் மேள தாளத்தோடு வரவேற்கப் பட்டார்கள். தோழர் கருணாநிதி தி. மு. க. கிளையை துவக்கி வைத்தார். வரவேற்பிதழ் வாசித்தளிக்கப் பட்டது. சுற்றுப் புறத்திலுள்ள ஏராளமான மக்கள், கடுமையான வெய்யிலையும் பொருட் படுத்தாமல், கருணாநிதியின் சொற்பொழிவைக் கேட்டார்கள். ரூ. 6-5-0 மாநில மாநாட்டிற்காக அளிக்கப் பட்டது.

பாலகர்களின் அணிவகுப்பு

கடலாடி கூட்டத்தை முடித்துக் கொண்டு பரமனந்தல் போகும் வழியில் சிங்காரவாடியில் இளம் மாணவ சிறுவர்கள் அணிவகுத்து, கருணாநிதிக்கு வணக்கம் செலுத்தினார்கள். கருணாநிதி சிறிது நேரம் மாணவர்களிடம் உரையாடினார்.

பலராமன் - பேபி திருமணம்

பரமனந்தலில் காலை 11—மணிக்கு, தோழர் போளூர் சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில், தோழர் பலராமன் அவர்களும், தோழியர் பேபி அவர்களும், வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். செங்கம் தோழர் வெங்கிடாசலம், தோழர் முல்லை சத்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கிய பின், கருணாநிதி மணமக்களுக்கு வாழ்த்து கூறி, சீர்திருத்த திருமணங்கள் நடைபெற வேண்டிய அவசியத்தைக் குறித்து நீண்டதோர் உரை வழங்கினார். லண்டன் மாநகரிலிருந்து அங்கு தமிழ் கற்றுக் கொள்ள வந்திருக்கும் ஆங்கிலேய மாணவர், இத் திருமண நிகழ்ச்சியைக் கண்டு வியந்தார். அவருக்கு நம் கொள்கை விளக்கம்தரப்பட்டது. அவர் கருணாநிதியுடன் நின்று படம் பிடித்துக் கொண்டார். மணமக்கள் சார்பாக மாநில மாநாட்டிற்கு ரூ 10-ம், மாவட்ட கழக வளர்ச்சிக்காக ரூ. 5-ம் அளிக்கப் பட்டது.

இந்தச் சுற்றுப் பயணத்தில் மாவட்ட செயலாளர் முல்லை. சத்தி அவர்களும், துணைச் செயலாளர் தோழர் கருத்தோவியன் அவர்களும், தோழர் போளூர் சுப்பிரமணியம் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

மாளிகையும்....

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

மண் குடிசையில்—

வெகு நேரத்திற்குப் பிறகு, கிழவன் கண் விழித்துப் பார்த்தான். கடைசி மூச்சு அவன் தொண்டையில் இழையோடிக் கொண்டிருந்தது. தங்கத்தை அழைத்தான்; அவளைக் காணோம். மெதுவாகக் கைத்தடியை ஊன்றியபடியே கொல்லைப் புறத்தை எட்டிப் பார்த்தான். மங்கலான நிலவொளியில், கொழுத்த காளை மாடு ஒன்று கொல்லைப் புறத் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்தது; ஆனால் அதை விரட்டக் கூடிய தெம்பு கிழவனுக்கு இல்லை.

எரிந்து கொண்டிருந்த அகல் விளக்கின் பிரகாசம் மங்கிக் கொண்டிருந்தது. கிழவன் தங்கத்தைத் தேடிக் கொண்டு வெளியே புறப்பட்டான். அவனால் நடக்க முடியவில்லை. தள்ளாடி தள்ளாடி சென்றான். "தங்கம், தங்கம்" என்று உரத்துக் கூவினான். அவன் கூச்சல் கேட்பாரற்றுக் காற்றிலே கலந்து மறைந்தது. மாளிகைக்குச் சற்று தூரத்திலேயுள்ள குளக்கரைவரை கிழவன் நடந்தான். அதற்குமேல் அவனால் நடக்க முடியவில்லை; அவன் கண்கள் இருண்டன. குளக்கரையிலேயே மயங்கி வீழ்ந்தான்.

★

மாளிகையில்—

கசங்காத மலருடனும், கலையாத கூந்தலுடனும் நுழைந்த தங்கம்—கசங்கிய மலருடனும் கலைந்த கூந்தலுடனும், அலங்கோலமாக ஆடைநெகிழ்ந்திருக்க அடிபட்ட பெண்புலி போல வெளியேறினாள். அவளுடைய கண்கள் சிவந்திருந்தன. கண்ணீர் கன்னங்களில் வழிந்தோடிக் கொண்டிருந்தது இரவு எங்கும் அமைதி குடி கொண்டிருந்தது. ஆனால், ஏழைப் பெண் தங்கத்தின் உள்ளம் மட்டும் எரிமலைபோல் குமுறிக் கொண்டிருந்தது! அவள் குடிசையை நோக்கி நடந்தாள். குளக்கரையை அவள் தாண்டிச் செல்லுவதற்கும், அங்கே மயங்கிக் கிடந்த கிழவன் தண்ணீரில் உருண்டு விழுவதற்கும்சரியாகஇருந்தது. நீரில் மூழ்கிய கிழவன் உயிர் விடும்போதும் அருமைப் பேத்தியின் பெயரை உச்சரித்துக் கொண்டே உயிர் நீத்தான்.

"தங்கம், தங்கம்" என்ற குரல், குளக்கரையைத் தாண்டிச் செல்லும் அவள் காதுகளிலும் விழுந்தது. அந்த நேரத்தில் அவளை அன்புடன் பெயர் சொல்லி அழைக்க யார் இருக்கிறார்கள்? அது வெறும் மனப் பிரமையென எண்ணித் தன் வழியைத் தொடர்ந்தாள்.

மண் குடிசையில்...

மங்கலாக எரிந்த விளக்கும் இப்பொழுது அணைந்து போயிருந்தது. தன்னை அன்புடன் வளர்த்த கிழவனுக்கு உதவி தேடச் சென்ற தங்கம், அவள் உயிரினும் மேலான ஒன்றை இழந்தபின், தனக்கு ஒரே ஆதரவான கிழவனையும் குடிசையில் காணாமல் தவித்தாள். கொல்லைப் புறம் சென்று தேடினாள்; இதுவரையில் கிழவன் போற்றி வளர்த்த தோட்டம் மொட்டைக் காடாகக் காட்சியளித்தது.

'குளக்கரையில் கேட்ட குரல் ஒருவேளை பாட்டனின் குரலாக இருக்குமோ...?' — இந்த எண்ணம் அவள் மனதிலே பெருந் திகிலை உண்டாக்கியது. குளக்கரையை நோக்கி ஓடினாள். எழுபது ஆண்டுகள் ஏழ்மையுடன் போராடிய கிழவன் குளத்தில் பிணமாகக் கிடந்தான். ஏழைப் பெண் அழகுடன் பிறந்துவிட்டால் மானத்துடன் வாழ முடியாது என்ற பயங்கர உண்மையைத் தங்கம் அப்பொழுது நன்குணர்ந்தாள். பெண்களின் கற்பைப் பண பலத்தால் குறையாடும் 'பண்ணையார்'கள் வாழும்வரை, ஏழ்மையில் பிறந்த அழகு கசக்கப்பட்ட மலராகவே முடியும் என்று உணர்ந்த தங்கம், மாளிகைக்குச் சாபமிட்டபடியே குளத்தில் விழுந்து உயிர் நீத்தாள்! மண் குடிசை வாழ்விழந்தது; ஆனால் மாளிகை மட்டும் எப்பொழுதும்போல் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது!

மறுநாள் காலை; கிழவன் ஒருவனும் இளம் பெண் ஒருத்தியும் குளத்தில் பிணமாக மிதக்கும் செய்தி கிராமமெங்கும் பரவியது. பிரேத விசாரணைக்காக பண்ணையார் தலைமையில் பஞ்சாயத்துக் கூடியது. 'தீர விசாரணை' செய்தபின், வறுமையின் காரணமாகக் கிழவனும் பெண்ணும் 'தற்கொலை' செய்து கொண்டதாகப் பஞ்சாயத்தார் தீர்ப்புக் கூறினர். தண்டிக்கப் பட வேண்டியவன் நீதி வழங்கிக் கொண்டிருந்தான்! பிணங்கள் பேசாது அல்லவா? பண்ணையார் பஞ்சாயத்து கலைந்தவுடன் வீட்டை நோக்கி நடந்தார். ஆயுள் ஓமம் வளர்த்து ஆண்டவன் அருள்பெற்ற அவருடைய குழந்தை இறந்து போன செய்தி மாளிகையில் அவரை வரவேற்றது...!

★

கவிஞர் கண்ணதாசன் எழுதிய
ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி 4-8-0
ஈழத்துராணி 1-0-0
பெரும்பயணம் 1-0-0
கூட்டுக்குரல் 1-0-0
இலக்கியத்தில் காதல் 1-4-0
கண்மணி (தென்னரசு) 1-0-0
அருணோதயம். சென்னை-14

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

அன்பின் அடிமை

[சிறுகதை]

ஆயிரமாயிரமாகப் பணத்தைக் கொட்டி நிலம் வாங்கியவர், அதிலே கதிருக்குப் பதிலாகக் கள்ளிக் காளான்களைக் காணவா விரும்புவார்?

உயிர் பறிக்க மூச்சை அடக்கும் அலைகள்-உடல் விழுங்கத் துடித்திடும் சுறாக்கள்; திமிங்கிலங்கள்-இத்தனைக்கும் அஞ்சாது, கடலடிக்குச் செல்லுபவரின் கரங்களிலே முத்துகளுக்குப் பதிலாக வெறும் சிப்பிகளே கிடைத்தால்...?

அப்பப்பா! அத்தகையோரது உள்ளத்திலே எத்தகைய ஏக்கம்—ஏமாற்றம் — 'ஏது செய்வோம்?' என்ற வேதனை தோன்றும்!

பாடுபட்டு — பின் பலனுக்குப் பதிலாக பாதகம் பெற்ற அத்தகைய ஒரு சோக நெஞ்சத்தவரைத்தான் இப்போது அறிமுகப் படுத்தப் போகிறேன்.

அதோ, அழகு மாளிகை ஒன்றிலே — அலங்கார வாசலிலே — கன்னத்தில் கைவைத்து உட்கார்ந்திருக்கிறாரே, அருணகிரி — அவர் தான் நான் குறிப்பிடும் நல்லவர்; நாளெல்லாம் உழைத்தவர்; நற்பலனுக்குக் காத்திருந்தவர்;

கடிதத்திற்கு....

தேனி.

அன்புள்ள அண்ணா,

ஒரு கேள்வி. என் தம்பி ஒரே பிடிவாதக்காரனாக இருக்கிறான். என்னை மட்டுமல்ல; அம்மா, அப்பாவைக் கூட மதிப்பதில்லை. பெரிய கோபக்காரனாகி விட்டான். அவன் திருந்துவதற்கு என்ன வழி? தயவு செய்து தெரிவிக்க வேண்டுகிறேன், அண்ணா.

தங்கை,
அ. மல்லிகா.

ஆனால்...அவரது தோற்றத்தைப் பாருங்கள்—அது என்னவோ 'எனக்குக் கிடைத்தது ஏமாற்றம்! ஏமாற்றமே!' என்று சொல்லாமல் சொல்லுகிறது.

அவர் நிலம் வாங்கவில்லை; முத்துக் குளிக்கவில்லை. ஆனால், அழியாத நிலத்திற்கும் மங்காத முத்துக்கும் மேலாக ஒரே ஒரு ஆசை மகனைப் பெற்றவர். இப்போது அந்த அன்பு மகன் பண்பு கெட்டவனாகி விட்டானே—என்று பதைக்கிறார். ஆமாம்; அவர் வாங்கிய அந்த நிலத்திலே கள்ளிதான் வளருகிறது; அவர் பொறுக்கிய முத்துக்கள் அத்தனையும் காலிச் சிப்பிகள்தான்! அன்பு தந்தார்; அநீதி கிடைக்கிறது. துடிக்காதா அவர் பாச நெஞ்சு! கேளுங்கள்;

★

அவருக்கு நாதன் பிறந்தபோது அக மகிழ்ந்தார். அவன் மழலை பேசியபோது சிரித்தார். பள்ளி சென்ற நேரத்திலே களித்தார். "பாருங்கள்; படிக்கிறான் என் கண்மணி — பார் புகழ மேதையாவான்—பின் குவிப்பான் செல்வம் —பாங்கியிலே பணம் தங்கும்— என் நெஞ்சிலும் பூரிப்பு பொங்கும்—எனக்கென்ன கவலை, என் மகன் இருக்கும்போது?" என்றெல்லாம் எண்ணினார். அந்த ஆசையால் — அன்பால் — அவனை வளர்த்தார். கவலை தோன்றாது காத்து வந்தார். அளவுக்கு மீறி 'செல்லம்' தந்தார். ஆனால் அதன் விளைவு? இப்போது விபரீதமாக உருவெடுத்து விட்டதே!

கண்டிப்பற்ற அப்பாவின் போக்கு அந்த மகனை 'காட்டு ராஜா' வாக்கியது. அப்பாவையும், அம்மாவையும், உடன் பிறந்த தங்கைகளையும் விருப்பம்போல் ஆட்டி வைத்தான். 'மகன்தானே —அதுவும் ஒரே செல்வனல்லவா' என்று நினைத்தனர் பெற்றோர். பாவம், அதன் முடிவு என்னவாகும் என்று உணராதவர்கள்!

நாதனின் பிடிவாதமும் வீம்பும் 'பள்ளிக்குச் செல்லாதே' என்றும் தடுத்துவிட்டது அவனை. அவன் அரை குறையாகப் படிப்பை நிறுத்திவிட்டான். விபரமறிந்த அருணகிரி அதட்டினார். அடங்குவானா நாதன்? 'கிணற்றில் விழுவேன்; தூக்கிலே தொங்குவேன்' என்றெல்லாம் பயமுறுத்தினான். முடிவில் வீட்டுக்குத் தெரியாமல் ஊரை விட்டே ஓடி விட்டான்!

அருணகிரி துடித்தார்; அம்மா பதறினார்; பெற்ற மனம் அவர்களைப் பித்தர்களைப் போல பிதற்ற வைத்தது. புலம்பினார்கள்; புரண்டார்கள்.

போகட்டும், சென்றவன் திரும்பினானா—என்று கேட்கிறீர்களா? திரும்பினான். இரண்டு ஆண்டுகள் கழித்து. சாதாரணமாக அல்ல; நடந்தல்ல; காரில்—பக்கத்திலே சிலர் புடைசூழ!

பட்டு சொக்காயும், பளபளக்கும் 'பூட்சு'களும் அணிந்து வந்த மகனைக் கண்டதும் தாய் பாய்ந்து வந்தார். "வந்தாயா என் செல்வமே!" என்று இறுக அணைத்துக் கொண்டார் அவனை. செய்வதறியாது திகைத்துநின்றார் அருணகிரி. ஆனால் கண்கள் சும்மா இருக்குமா? மகனைக் கண்ட மகிழ்ச்சியைக் கண்ணீரின் மூலமாகத் தெரிவித்துக் கொண்டிருந்தன.

நாதன் தனது இரண்டு ஆண்டு இடைக்கால வாழ்க்கையைச் சொன்னான். தான் வளர்ந்தது போல தன் நிலையும் வளர்ந்துவிட்டதை விளக்கினான். வீம்பும் கோபமும் வீட்டை விட்டுத் துரத்த—பசியும் பட்டினியும் அவனைப் பிச்சைக்காரனைப் போல் அலையவிட — அன்பும் பண்பும் கொண்ட ஒரு பணக்காரரின் ஆதரவு அவனுக்குக் கிடைத்தது. அவர் ஒரு சினிமா முதலாளி— நாதன் ஒரு சினிமா பித்தன். இந்த சந்தர்ப்ப ஒற்றுமை பலனைத் தந்து விட்டது. புதுமையிலேயே முயற்சி செய்து அதிலே வெற்றியும்கண்டவர் அந்த சினிமா முதலாளி. ஆகவே அவர் நாதனை-அவனது தோற்றத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார். அதன் முடிவு......? அனாதைச் சிறுவன் ஒருவனைப் பற்றி படம் எடுத்த அவர் நாதனை திரையிலே மின்ன விட்டார். நாதன் பூரித்தான்; அவர் மனம் சிறக்க நடித்தான்.

இப்போது நாதன் 'மாஸ்டர் நாத்' என்று மாறிவிட்டான். செய்தி அறிந்த பெற்றோர் மகிழ்ந்தனர். மகனுக்கு 'திருஷ்டி' சுத்தி போட்டார்கள். பரிதாபத்துக்குரியவர்கள்! மகன் நேற்றுவரை தேளாக இருந்தான்; இனி பாம்பாக மாறப் போகிறான் என்பதை உணராதவர்கள்-அந்த மூட நம்பிக்கையையும் நம்பியதில் வியப்பில்லையே!

அன்பும் ஆதரவும் எங்கு இருக்கிறதோ, அங்குதான் பிள்ளைகளின் மனம் இருக்கும்; நாட்டம் இருக்கும்; ஆசை இருக்கும் என்று சொல்லுவார்கள். ஆனல். நாதன் என்னவோ அந்த நியதிக்கு விதிவிலக்காகத்தான் இருந்தான். அப்பப்பா! சம்பாதிக்க ஆரம்பித்து விட்ட அவனது நெஞ்சிலே அப்போதுகூட பெற்றவர்களின்மேல் பாசம் ஏற்படவில்லை. அவனிடம் பணம் புகுந்தது; அந்தப் பணமோ, அவனிடம் கொஞ்ச நஞ்சமிருந்த மனிதத் தன்மையையும் விரட்டி விட்டது!

அவன் நடித்த படம் வெளியானது. எதிர்பாராத வெற்றியைத் தந்தது. படமெடுத்தவரின் பெட்டி நிரம்பியது. நாதனுக்குப் பெயர் உயர்ந்தது. அப்புறமென்ன? எறும்பு ஊர்வலம்போல் அவன் வீட்டுக்கு மோட்டார்கள் படையெடுக்க ஆரம்பித்தன. ஒன்றன்பின் ஒன்ருக பல படங்களில் நடிக்க அந்த 'குட்டி நடிகனை' அழைத்தார்கள். பணம் குவிந்தது, கொள்ளை கொள்ளையாக! ஆனால் எல்லையைத் தாண்டி எங்கேயோ ஓடிக்கொண்டேயிருந்தது அவனது குடும்பப் பற்று!

'சம்பாதிக்கிறேன் நான்; இனி பெற்று வளர்த்தவர்களுக்கு நான் செய்யவேண்டிய கடமை என்ன? அவர்களை மகிழச் செய்ய வேண்டியதுதானே!'—இந்த எண்ணம் அவன் நெஞ்சில் தோன்றவேயில்லை. ஆனால், அதைவிடப் பயங்கரமான—நெஞ்சுலுக்கும் வேதனையான செயல்களைச் செய்யத் தொடங்கினான் அவன். ஐயோ... அதை எப்படிச் சொல்லுவது? தந்தையையும், தாயையும் வீட்டை விட்டே வெளியேறச் சொன்னான் அவன். எப்படி இருக்கும் அருணகிரிக்கு? அத்திரத்தால் கொதித்தெழுவார். 'வேண்டாம்!' என்று எங்கிருந்தோ ஓடிவந்து தடுத்துவிடும், அவர் மனதிலே அதுவரை சாகாதிருந்த பிள்ளைப் பாசம்.

அன்றொரு நாள்—

பட முதலாளி ஒருவர் நாதனின் வீட்டுக்கு வந்திருந்தார். அவர், நாதனிடம் பேசிக் கொண்டிருந்த போது—"தம்பீ நாத்! உனக்குக் கிடைத்த வேலைக்காரன் ரொம்ப நல்லவனப்பா! உன்னிடம் எத்தனை அன்பு கொண்டிருக்கிறான் பார்த்தாயா...?" என்று பேசிக்கொண்டு வந்தார்.

இடைமறித்தான் நாதன்— "நீங்கள் யாரைச் சொல்லுகிறீர்கள்?..."

"அதோ, வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறானே அவனைத் தான்...பெற்ற அப்பன் கூட இப்படி அன்பு காட்ட மாட்டானப்பா...அருமையான வேலைக்காரன்..." என்றார் முதலாளி.

கண நேரம் பேசாமல் இருந்தான் நாதன். உடனே "ஆமாம்; ஆமாம்! அருமையான வேலைக்காரன்தான் அவன்!" என்று ஆமோதித்தான். சற்று நேரத்திற்கெல்லாம் அந்த பிரச்சினைக்குரிய வேலைக்காரன்—வேதனை அதிகரிக்கிறது இதைக் குறிப்பிட— அருணகிரிதான் விம்மி விம்மி அழுதார். அது அந்த முதலாளிக்குத்

....பதில்!

தங்கத் தங்கைக்கு,

உன் தம்பியைத் திருத்த ஒரே வழி 'அன்பு'தான். அகந்தையும், ஆணவமும் ஒரு நாள் 'அன்பு'க்குத் தலை வணங்கியே தீரும்! ஆகவே, எக்காரணம் குறித்தும் உன் தம்பியிடம் கொண்டுள்ள அன்பை மட்டும் குறைத்து விடாதீர்கள். முடிவில் கண்டிப்பாக உன் தம்பி திருந்துவான். அப்படிப்பட்ட தம்பி ஒருவனை பற்றிய கதை இவ்விதழில் வருகிறது.

தெரியாது. பெற்றவரைப் பணியாள் என்று சொன்ன அந்தப் பொல்லாத நாதனுக்கும் தெரியாது.

மற்றொரு நாள்—

பலகாரங்கள் பலவற்றுடன் அவனைக் காண வந்தார் மற்றொரு முதலாளி. ருசியான தின்பண்டங்களை சுவைத்தான் நாதன். அப்போது அந்த முதலாளி, "தம்பீ! இரு: இதில் கொஞ்சம் உன் வீட்டு வேலைக்காரனுக்கும் கொடுப்போம்" என்றார்.

"வேண்டாம்; வேண்டாம்! அவனுக்கு எதற்கு இதெல்லாம்? இந்தச் சுவையான பண்டங்கள் அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காது!" என்று தடுத்தான், நாதன். இதையும் கேட்கத் தவறவில்லை அருணகிரி. அந்த இருதயமற்றவனின் ஏளனச் சொற்களைக் கேட்டு அவர் துடித்தார். 'ஐயோ, மகனே!' என்று புலம்பினார்.

இப்போதாவது புரிகிறதா, கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு அந்த அப்பா சோர்ந்து போய் உட்கார்ந்திருப்பதின் காரணம்? அவர் ஏமாற்றப் பட்டார். பெற்ற மகனிடம் பாசத்தை எதிர்பார்க்க முடியாத ஏமாளி!

★

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) சி. சு. தேவராசன்,
64, குடியானத்தெரு,
சிறுதையூர்
[திருச்சி மாவட்டம்]

ப. துரைசாமி; கும்மம்பட்டி.
(?) இந்த நாட்டில் விவசாயிகள் இல்லாவிட்டால்...?
மிராசுதார்கள் கிசான் தோல்லை ஒழிந்தது—என்று கூத்தாடுவார்கள்!

காசிம் உசேன்; குளித்தலை.
(?) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நேரு சர்க்கார் தென்னிந்தியரின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்குமா?
ஒழிக்கும் — காங்கிரஸ்காரர்களிடையே உலவும் 'மந்திரி வேலையில்லாத திண்டாட்ட'த்தை!

கோ. மனோகரன்; கோட்டார்.
(?) டௌன்செண்ட் என்னும் சாமான்யனைக் காதலித்துக் கைவிட்ட மார்கரெட் இளவரசியை எதற்கு ஒப்பிடலாம்?
பணமூட்டைகளின் பக்க பலமான காங்கிரஸ் ஏழைகளின் இருதய கீதமான சோஷலிசக் கொள்கையைக் காதலிப்பதற்குத்தான் ஒப்பிட வேண்டும்!

என். கே. அர்ஜுனன்; பெங்களூர்.
(?) தீபாவளி யாருக்கு?
தொப்பை கிரம்ப பலகாரம் சாப்பிட்டோருக்கு!

ஏ. ஆர்; மாம்பலம்.
(?) மனிதன் தன்னை மறப்பது எப்போது?
குமாரசாமி ராஜாவுக்குக் கிடைத்ததைப் போல திடீரென்று கவர்னர் நாற்காலி கிடைக்கும்போது!

எஸ். சார்லஸ்; கண்டனூர்.
(?) இந்தியாவுக்கு வந்திருக்கும் புல்கானினுக்கு முக்கியமாகக் காண்பிக்க வேண்டிய இடம் எது?
ஆகஸ்ட் 15-முதல் ஏறிக் கொண்டேயிருக்கும் கதர்க் குல்லாய்களின் 'பாங்க் அக்கௌண்ட்'!

ஏ. ஜேசுராஜ்; நஞ்சம்பட்டி.
(?) பாரதப் பெண்களுடைய கற்பின் விலை மதிப்பென்ன?
பம்பாயிலுள்ள காமாட்டிபுரத்தில் அந்தப் பொருள் மலிவாகவே விற்கப் படுகிறதாம்!

க. மோகன்; பொன்மலை.
(?) மண்ணுலகம்; விண்ணுலகம்; பாதாளலோகம்—இதைத் தவிர வேறு உலகங்கள் உண்டோ?
உண்டு; அதுதான் திரை உலகம்!

ப. இராமசாமி; பெரியகுளம்.
(?) அரசியலும், சமுதாயமும் இரட்டைக் குழந்தைகளா?
இல்லை; சமுதாயம் தாய். அரசியல் அதன் குழந்தை.

இ. ரா. இராசாராம்; குடியேற்றம்.
(?) வெண்ணை திருடிய கண்ணனுக்கும், நம்முடைய மண்ணை திருடிக் கொண்டிருக்கும் 'முடிசூடா மன்னரு'க்கும் உள்ள வித்யாசம் என்ன?
ஒரே ஒரு வித்யாசந்தான்-கம்சன் இங்கே கவிழ்க்க முடியாத அளவுக்கு வளர்ந்து வருகிறான்!

ந. மணிமொழியன்; காங்கயம்.
(?) கடவுள் எப்போது கண்விழிப்பார்?
கற்சிலைக் கடவுள்தானே? சிற்பியின் சிற்றுளி படும்போது!

(●) சி.சு.தேவராசன்; சிறுதையூர்
(?) காந்தியார் மறைந்த நாளுக்குப்பிறகு நேருவும், ஆச்சாரியாரும் அழுததுண்டா?
ஏன் இல்லை? நேரு காங்கிரசைக் கட்டிக் கொண்டு அழுகிறார். ஆச்சாரியார் இராமாயணத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறார்!

(?) துரோகம் எங்கே முளைத்து எப்படி வளருகிறது?
சுயநலப் புழுதியில் தோன்றி, பொறாமைப் புழுவைத் தின்று வளருகிறது!

ம. குருச்சந்திரன்; திருகோணமலை
(?) தருமம் தலை காக்குமா?
காக்கும். அளவுக்கு மிஞ்சிய தருமம் தலையையும் சாய்க்கும்!

பொங்கல் மலர்
1956.

★

★பொங்கல் மலருக்கான வரவேற்பு, நாம் பூரிக்கும் விதத்திலே குவிந்த வண்ணமிருக்கிறது.

★மலரின் விலையை அதிகமாக்கினாலும் பரவாயில்லை; சென்ற ஆண்டுபோல் சிறப்போடு அளியுங்கள்—எனக் கடிதங்களை எழுதிய வண்ணமிருக்கிறார்கள் எண்ணற்ற தோழர்கள்.

★'மணிமகுடம்' நூல் வடிவிலே வருவதுதான் நல்லது; சென்ற ஆண்டு மலர் வாங்காதவர்களுக்கு, இந்த ஆண்டு மணிமகுடம் படிக்க வசதியிருக்காது—என்ற கருத்தைப் பலர் வலியுறுத்தி யிருக்கிறார்கள்.

★மணிமகுடத்திற்குப் பதிலாக, கருணாநிதியின் கருத்தோவியங்கள் பல மலரில் இடம் பெறுகின்றன.

விலையும் இரண்டே ரூபாய்தான்!

★

அருமையான சிறு கதை எழுதி, அதிலே முதன்மையான இடம் பெறும் இளம் எழுத்தாளருக்கு நல்லதோர் பரிசும் காத்திருக்கிறது. முழு விபரம் அடுத்த இதழில்!

விற்பனையாளர்களுக்கு: பொங்கல் மலரில் தங்களுக்குத் தேவையான பிரதிகளின் எண்ணிக்கையை, 1-12-55க்குள் தெரிவித்துவிட வேண்டுகிறோம்.

வ. ஆ. மாவட்டத்தில் மாநில மாநாட்டு நிதியளிப்புக் கூட்டத்தில் மு. க.

4—12—55 வேலூர் நேஷனல் டாக்கீஸ்.

10—12—55 காங்கேய நல்லூர் மாலை 6 மணி. இரவு 10 மணிக்கு குடியேற்றத்தில் ராசேந்திரன் நாடக மன்றத்தாரின் அறிஞர் அண்ணாவின் சந்திரமோகன் நாடகத்தின் தலைமை.

11—12—55 வாணியம்பாடி மாலை 6 மணி.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. கிளைக் கழக செயலாளர்களுக்கு

இதுவரையில் மாநில மாநாட்டு நிதிப் பங்கை அனுப்பாத கிளைக் கழக செயலாளர்கள் 4—11—55 வேலூரிலும், 10—12—55 காங்கேயநல்லூரிலும், 11—12—55 வாணியம்பாடியிலும் நடைபெறுகின்ற நிதி அளிப்பு கூட்டத்தில் தங்கள் தங்கள் கழகத்தின் பங்குத் தொகையை செலுத்த வேண்டுகிறேன். செயலாளர்கள் தயை செய்து உடனடியாக நிதி வசூலில் ஈடுபட்டு, நம் மாவட்டத்தின் கோட்டாவை பூர்த்திச் செய்ய, உதவ வேண்டுகிறேன்.

முல்லை. சத்தி,
செயலாளர்.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகளுக்கு

நாளது 4—12—55 அன்று 2—மணிக்கு, வேலூர் 'டவுன் ஹாலில்' மாவட்ட பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் பொதுக் குழு உறுப்பினர் தேர்தல் நடைபெறும். மாநில மாநாட்டிற்கு நிதி அளிக்காத கிளைக் கழக பிரதிநிதிகள் தங்கள் தங்கள் கிளைக் கழகத்தின் பங்கையும், பிரதிநிதி கட்டணம் செலுத்தாத பிரதிநிதிகள், பிரதிநிதிகள் கட்டணத்தையும் செலுத்த வேண்டுகிறேன். பிரதிநிதி தோழர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வர வேண்டுகிறேன்.

முல்லை. சத்தி,
செயலாளர்.

★

கூம்பூர்

25—11—55 வெள்ளி மாலை 4—மணிக்கு. முத்தாலம்மன் கோவில்திடலில், எல். வீரராசன் பி. சமதர்மம்—மற்றும் பலர் பேசுவர்.

★

குடியேற்றம்

27—11—55 ஞாயிறு மாலை 5—மணிக்கு, ஆற்றில், தோழர் தி. ச. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில், தோழர் தாமரைச் செல்வன் பேசுவார்.

★

பெரம்பூர்

27—11—55 ஞாயிறு மாலை 6—மணிக்கு, சுந்தரராஜ பெருமாள் (வடக்கு) தெருவில், தோழர் எஸ். பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் தலைமையில், திரு. வி. க. நினைவு நாள் கொண்டாடப் படும். துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் சி. பி. சிற்றரசு, இ. வ. ஞானசம்மந்தன்—ஆகியோர் பேசுவர்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-2.